

# ரமணோதயம்

ஜூலை 2022
காலாண்டு

அருணை விஜய இதழ்
விலை ₹ 20



1923 ஆம் ஆண்டு ஜனவரி 3 ஆம் நாள் பகவான் ஜயந்தி தினம் கொண்டாடப்பட்டது. அதற்கு சுமார் ஒருவாரத்திற்கு முன்பே பகவான், தான் வசித்து வந்த மலை குகையில் இருந்து இறங்கி நிரந்தரமாக அன்னைக்கு சமாதி வைக்கப்பட்ட இடத்தில் (தற்போதைய ரமணாச்ரமத்தில்) தங்க ஆரம்பித்தார் என்று பதிவாகிவுள்ளது. இதன்படி 28 டிசம்பர் 1922 ஆம் ஆண்டு ஸ்ரீ ரமணாச்ரமம் உருவானது.

## ரமணோதய அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்

ரமணோதய சந்தா புதுப்பிக்காதவர்கள் தயவுசெய்து தங்களது சந்தாவைப் புதுப்பிக்கவோ அல்லது ஆயுள் சந்தாவாகச் செலுத்தவோ செய்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்

உதயம் 21 ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய மலர் 4

# ரமணோதயம்

நானுதியாதுள்ள நிலை நாமதுவாய் உள்ள நிலை

அருணை விஜய இதழ்

ஜூலை 2022

ஆசிரியர்: Dr. S. ராம் மோஹன்

• கட்டுரைகள், ஆண்டு சந்தா, விளம்பரங்கள் குறித்த அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் ஸ்ரீ ரமண கேந்திர அலுவலக முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

• கட்டுரைகளுக்கு சன்மானம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. பிரசுரமாகாத கட்டுரைகள் வேண்டுகோளின்பேரில் திருப்பி அனுப்பப்படும்.

• மற்றைய எழுத்தாளர்களின் கட்டுரைகளில் வெளிவரும் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல.

## சந்தா விவரங்கள்

ஆண்டு சந்தா: ₹ 75 தனி பிரதி: ₹ 20
ஆயுள் சந்தா: ₹ 1500

காசோலை/மணியார்டர் 'ரமணோதயம்' என்ற பெயரில் எடுத்து ரமண கேந்திரா டிரஸ்ட், 41, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர், சென்னை 600 004 என்ற முகவரிக்கு அனுப்பவும்

ரமணோதயம் தகவல் மற்றும் தொடர்புக்கு அணுகவும்:
மின்னஞ்சல்: arunamramanam@gmail.com
மேலாளர் கண்ணன்: 9940418375

வடிவமைப்பு: ஸ்ரீ ரமணாச்ரமம்

பதிப்பாளர் & அச்சிடுபவர்:
ஆ. குமார் ராஜா, ரமண கேந்திரா டிரஸ்ட்
41, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004

உரிமை: ரமண கேந்திரா டிரஸ்ட், சென்னை 4
தொலைபேசி: 24611397

# பொருளடக்கம்

அருணை விஜய இதழ், ஜூலை 2022


| வ.எண் | பொருள் | | ப.எண் |
|---|---|---|---|
| 1 | ஆசிரியர் உரை | | 3 |
| 2 | ஔவைக் குறள் | ராம் மோஹன் | 15 |
| 3 | பேரமைதி நிலவிய பெருநாட்கள் | | 21 |
| 4 | தவமும் ஸ்வாத்யாயமும் பகவானின் வாழ்க்கையே உதாரணம் | ராம் மோஹன் | 25 |
| 5 | இனிவரும் திருநாட்கள் | | 35 |
| 6 | சிவனுக்கும் உண்டோ சினம்? | | 36 |
| 7 | வேதாந்த விசாரம் | டாக்டர் ஏ.வி. ராஜகோபாலன் | 42 |
| 8 | ரமண ஞான போதம்: முருகனாரின் சரணாகதி தத்துவம் | ரமண சுந்தரராஜன் | 53 |
| 9 | கருதியே திரிவீர் கருத்தினுள் ஒருகால் | ஆகுரா | 62 |
| 10 | தத்துவக் கொடுமுடியாம் தாயுமானவர் | ராம் மோஹன் | 68 |
| 11 | செய்திகள் | | 78 |

# ஆசிரியர் உரை

## அகமாயை களைந்திட வந்த பிரான்

*மேலைநாட்டு தத்துவ அறிஞர் கூறுகின்றார்:*

*உள்நோக்கிய யாத்திரை மிக நீண்டது (Journey inward is the longest). அனாதி காலந்தொட்டு இந்த உண்முக யாத்திரையை எங்ஙனம் நடத்துவது என்பது பற்றி பல்லாண்டுகளாக அறிஞர் முயன்று வந்துள்ளனர். பல்வேறு ஆண்டுகளாக விடை தேடப்படும் இந்தக் கேள்விக்குப் பட்டெனா விடையிறுத்தார் நம் ஞானச் செம்மல். "கடவுளைக் காணாதவர் யாருமேயில்லை. கடவுள் தரிசனம் இயற்கை ஆகும். சுவானுபவமாம் இந்த சிவானுபூதி உண்மையை உணராமையே அறியாமை அல்லது அஞ்ஞானம். அஞ்ஞானம் என்பது உடல் நாட்டமாகிய அகந்தையே. ஆதலால் அகந்தையின் நிவிருத்தியே கடவுளின் தரிசனம். கடவுளை அறிவது என்பது தானாக இருத்தலாம். ஸ்வானுபூதியே பிரம்மானுபூதி. கடவுளும் நானும் வேறல்ல" என்று அநாயாசமாக இந்த யுகம் யுகமாகத் தொடர்ந்த தேடலுக்கு நேர்வழி காட்டியவர் பகவான் ரமணர். 'ஆத்மா அமிர்த இஹ பவதி' ஆத்மா இந்த இடத்திலேயே இப்போதே அறியப்படுகிறது என்ற உபநிஷத் வாக்யத்தைத் தெள்ளத்தெளிவாக தமது வாழ்க்கையின் ஒவ்வொரு விநாடியும் வாழ்ந்து காட்டியவர் பகவான்.*

*'ரிஷி' என்ற சொல்லைக் கேட்டவுடனே நம் நினைவில் வருவது பகவான் ரமண மஹரிஷியே. 'ரிஷி' என்னும் சொல் ஒரு மந்த்ர த்ருஷ்டாவை, ப்ரபஞ்சத்தில் வந்திருக்கும் சப்த அலைகளை உள்ளுணர்வால் ஹ்ருதயாகாயத்தில் நிறுத்தி மந்திரங்களாய் உலகத்திற்கு அளிக்கும் மஹான்களைக் குறிக்கும். இங்ஙனம் கவரப்பட்ட ஆயிரக்கணக்கான மந்திரங்களில் எளிதாயும் தலையாயதாகவும் திகழ்வது பகவான் அருளிய மந்திரமாகிய 'நானார்' என்பதாகும். ஆத்ம சாதனை என்பது கடத்தற்கரிய மாபெரும் சமுத்திரம் என்னும் அச்சத்தை நீக்கி, 'ஆன்ம வித்தை அதிசுலபம்' என்னும் உயரிய உபதேசத்தை வழங்கியவர் பகவான். தம்முன் வந்த ஆன்ம எழுச்சி பெற்றார்க்கு, தன் சக்தி விசேஷத்தாலேயே உய்த்துணர வைத்தவர் பகவான். அந்த நுண்ணுணர்வு இல்லாதவர்க்குத் தம்முடைய ஆற்றொழுக்கான உபதேசப் பாக்களாலும் அருள்மொழி விளக்கத்தாலும் அறிய வைத்தவர் பகவான். வேதகால ரிஷிகளின் வாழ்க்கையைக் காணுமிடத்து, அவர்களில் சிலர்கூட சில தருணங்களில் மாத்சர்யம், க்ரோதம் போன்ற உட்பகைகட்கு வசமானதைப் புராணங்களில் காண்கிறோம். ரிஷி பரம்பரையை ஆராயும்போது இவை அனைத்தையும் கடந்து ப்ரம்ம ஸ்வரூபமாகவே வாழ்ந்தவர்கள் வேதகாலத்தில் சுகப்பிரும்ம ரிஷியும், சமீப காலத்தில் ரமண மஹரிஷியுமே ஆவர். எனவே 'மஹரிஷி' என்ற அடைமொழிக்கு முற்றிலும் பொருத்த மானவர் பகவானே.*

*'குணவான்' என்ற சொல்லிற்கு 'குணம் நிரம்பியவர்' என்பது பொருள். 'தனவான்' என்ற சொல்லிற்கு 'தனம் நிரம்பியவர்' என்பது பொருள். பகவான் என்றால் 'பகம்' நிறைந்தவர் என்று பொருள்படும். 'பகம்' என்ற சம்ஸ்க்ருத சொல்லுக்கு ஆறு அர்த்தங்கள் உள்ளன. 1. இணையற்ற ஞானம், 2. இணையற்ற ஐஸ்வர்யம் (பேரறிவாகிய பெரும் ஐஸ்வர்யம்) 3. பெரும் சக்தி*


4. இணையற்ற திறமை 5. இணையற்ற வீர்யம் 6. இணையற்ற தேஜஸ். இவை அனைத்தும் நிரம்பப் பெற்றவரே நம் பகவான்.

இரும்பைத் தங்கமாக்கும் ரசவாத மணிபோல தன் அருட்புலத்தின்கண் வந்தடைந்தோர் அனைவரையும் ஞானக் கொடுமுடியில் உலர்த்தினார் பகவான். தனது தன்முனைப்பு அடங்காது பகவான் சந்நிதியில் வந்த சிலர் அவரது ஆன்மிகக் கதிர்வீச்சால் பயன்பெறாது இருந்திருக்கலாம். வேறு சிலர் தமது ஆணவத்தால் உந்தப்பெற்று, தன்னைத் தானே சர்வக்ஞனாக கற்பனை செய்துகொண்டு கடினமான வேதாந்த பரிபாஷையினால் தம்மையும் குழப்பிக்கொண்டு, தம்மை அண்டியவரையும் குழம்பச் செய்கின்றனர். பகவானோ தெளிவின் கங்கை ஊற்று. ஸ்படிகம் போன்ற தெளிவான சொற்களால் ஆன்மிகக் கருத்துக்களையும், பயிற்சி முறைகளையும் கேட்போர் மனதில் ஊன்றச்செய்து, தகவிலர் எல்லோரையும் கூடத் தக்கார் ஆக்கிய சாந்நித்ய சீலர்.

*யஸ்யைவ ஸ்புரணம் ஸதா$^3$த்மகம் அஸத் கல்பார்த$^2$கம் பா$^4$ஸதே*
*ஸாக்ஷாத் தத்-த்வம்-அஸீதி வேத$^3$ வசஸா யோ போ$^3$த$^4$யதி ஆப்ரிதன்*
*யத் ஸாக்ஷாத் கரணாத்$^3$ ப$^3$வேந் ந புனர் ஆவ்ருத்திர் ப$^4$வாம் போ$^4$ நிதௌ$^4$*
*தஸ்மை ஶ்ரீ கு$^3$ருமூர்தயே நம இத$^3$ம் ஶ்ரீ த$^3$க்ஷிணாமூர்தயே*

*(தக்ஷிணாமூர்த்தி அஷ்டகம், 3)*

பொருள்: நம் அனைவர் இதயத்தில் அதிர்கின்ற பரமாத்மன் எனும் உணர்வு, பொய்மையான உலகத் தோற்றங்கள், உண்மையானதுபோல் மனதில் தோன்றுகின்றன.



நாம் நம்மை முழுமையாக நமது ஸத்குருவுக்கு அர்ப்பணிக்கும்போது, அனாதியான காலம் முதல் நம் இதயத்தே பதிந்து, வேதங்களால் 'தத் த்வம் - நீயே அது' என நம் இதயத்தே உறையும் ஸத்குருவால் உணர்த்தப்படுகின்ற பேருண்மையை சாதகன் அறிகிறான்.

இங்ஙனம் பரமாத்மாவைப் பற்றிய நேரடி ஞானம், ஸத்குருவின் அருளால் அனுபவமாய் சித்திக்கும்போது உலக அனுபவங்கள் என்னும் எல்லையற்ற மாயக் கடலின் பொய்த் தோற்றங்கள் பட்டென அழிகின்றன.

தன்னுடைய ஆழ்ந்த மௌன உபதேசத்தின்மூலம் நம்முள்ளே உறங்கிக் கிடக்கின்ற மெய்ஞானத்தை

*எழுப்புகின்ற, நமது இதயத்தில் அமர்ந்துள்ள பரமகுருவின் வெளிப்பாடாய்த் தோன்றியுள்ள நமது (பகவானாகிய) ஸத்குருவிற்கு எனது நமஸ்காரங்கள் என்பது பொருட்செறிந்த மூன்றாவது ஸ்லோகத்தின் பொருள். இது முழுதுமே நமது பகவானின் பேரருள் செயல்படும் விதத்தைப் பல நூற்றாண்டுகட்கு முன்பே சங்கர பகவத்பாதர் சித்தரிப்பதுபோல் தோன்றுகின்றதல்லவா!*

*பகவானின் அருட்பார்வையின் சக்தி மகத்தானது. எங்ஙனம் புலிவாயில் அகப்பட்ட உயிர் திரும்பாதோ அங்ஙனம் சத்குருவின் பார்வையில்பட்ட சீடன் புற உலகிற்குத் திரும்பான் என்பது பகவானின் வாக்கு. எங்ஙனம் அன்னை மீனாட்சியின் திருக்கண் நோக்கினால் அகிலம் முழுதும் பரிபாலிக்கப்படுகிறதோ, ஸ்ரீ பகவத் பாதரின்பால் எந்த மஹாசக்தி வாக்காகத் திகழ்ந்து அண்டியவர்க்கு ஞானம் வழங்கியதோ, அதே அருட்சக்தி பகவானின்பால் பார்வையில் உலகத்தைப் பாலிக்கும் பரஞ்சுடராகத் திகழ்ந்தது.*

*பகவானைக் கண்ட மாத்திரத்தில் நான் புதிய மனிதன் ஆனேன். என் பதற்றங்களும் துருதுருப்புக்களும் மாயமாய்ப் போயின. நான் முன்னே உலகில் உன்னதமாய் எண்ணியவை எல்லாம் தூசி பெருத்ததாயின் என் மனதில் எழுந்த எண்ணங்கள் யாவும் ஒவ்வொன்றாக அடங்கி, மனம் பேரமைதி உற்றது என்பது பால்பிரண்டனின் அனுபவம். பகவானுடன் தர்க்கம் செய்ய முற்பட்டு, தன்முனைப்புடன் சந்நிதிக்கு வந்தவர்கள் பகவானின் பார்வை பட்டவுடன் உரையாடல்களைப் பெற்று, பகவானின் அருட்பிரவாகத்தில் நனைந்து, புதிய மனிதர் ஆயினர். ஆணவத்தை மன்னித்து அருளுமாறு அவர்கள் வேண்டியபோது, "யார் யாரை மன்னிப்பது? எல்லாமே அதுவாகவே உள்ளபோது மன்னிப்பவனோ மன்னிக்கப்*

படுபவனோ யாருமே அங்கு இல்லை” என்பது பகவானின் கூற்று. வாசித்துக் காணொணாதது, பூசித்துக் கூடொணாதது, வாய்விட்டுப் பேசொணாதது, அந்த ஆத்ம வஸ்துவைத் தனது அருட்பார்வையினாலேயே உள்ளே ஒளிரச் செய்தவர் பகவான்.

கவிஞர் வால்ட் விட்மேன் கூறுகிறார்:

“நான் கண்ட ஆத்மானுபவத்தின் பெருஞ்சிறப்பை எடுத்துரைக்க எனக்குச் சொற்களே கிடைக்கவில்லை” என்கிறார் விட்மேன். பகவான் சந்நிதியில் உத்தம சாதகர்க்கு ஏற்பட்ட அனுபவம் இது.

பகவான் ‘உள்ளது நாற்பது அனுபந்த’த்தில் கூறுவதுபோல் ஆன்மாவின் உறைவிடம் இதயம். ஹ்ருதயம் என்பது ஹ்ருத்+அயம் என்னும் இரு சொற்களின் கூட்டு. இதன் பொருள் அவன் இருக்குமிடம் என்பதாம். உபநிஷத்தில் கூறும் உவமை: சிலந்தி தன்னிடமிருந்தே நூலை இழுத்து வலைபின்னி, பின்னர் தானே அதில் அமர்வதுபோல, உள்ளத்தில் இருந்து உலகம் தோன்ற, பல்வேறு செயல்களில் ஈடுபாடு, பின்னர் அதிலேயே லயமாகிறது. ‘நான்’ என்ற எண்ண எழுச்சியிலிருந்தே பல்வேறு ஜகமாயைகள் தோன்றுகின்றன. ஜீவன், ஜகத், ஈஸ்வரன் என ஒரே பரம்பொருளே பல்வேறு விதமாய்த் தோன்றுகின்றது. இதன் அதிஷ்டானம் - அடிப்படை - ‘தான்’ எனப்படும் ப்ரம்மம் ‘அஹம் ப்ரஹ்மாஸ்மி’. அந்நிய வஸ்துக்களை எல்லாம் ‘இவை நானல்ல’ என்று விலக்கியபின் எஞ்சிநின்று விளங்குவது ‘நான்’ என்னும் பேரறிவு. அந்நிய வஸ்துக்களை எல்லாம் இவை ‘நான் அல்ல’ என்று விலக்கியபின் எஞ்சிநின்று ஒளிர்வது ஆன யோகம் எது?

‘நான் - அஹம் பிரஹ்மாஸ்மி’ என்னும் பேரறிவு ‘நான்-நான்’ என்னும் தன்முனைப்பு ‘தான்-அஹம்’ ஆகிய ஆன்ம ஸ்வரூபத்தை அறியும்போது உலகம்



தோன்றாது. எண்ணங்கள் தோன்றத் தோன்ற "இவை யாருக்குத் தோன்றுகின்றன?" என்று விசாரித்து உதித்த இடத்திலேயே ஒடுங்கச் செய்ய வேண்டும். இதுவே கர்மயோகம், இதுவே ஞானயோகம். இதுவே ரமண யோகம். மூர்த்தி தியானம் மந்திர ஜபம், பக்தி வழிபாடல்கள் மனமடங்கச் செய்யும் உபாயங்களே. மனத்தின் அழிவு, நானார் என்ற விசாரணையினாலேயே சித்திக்கும். இடைவிட்டு இறைவனை எண்ணுவதைவிட இடைவிடாது ஆறுபாய்தல் போலவும், நெய்ந்தாரை இடைவினை இல்லாமல் வீழ்வது போலவும் ஆத்ம விசாரணை செய்வதே உண்மையான தியானம்.

அகந்தை எழுகின்ற இடத்தை, கிணற்றில் வீழ்ந்த பொருளை எடுக்க முயல்பவன், பேச்சையும் மூச்சையும் அடக்கி உள்ளே ஆழ்தல்போல கருத்தோடு தன்னுள்ளே ஆழ்ந்து 'நான் யார்' என்பதை அறிய வேண்டும். இதுவே ரமண யோகம்.

ரமண பகவானுக்கு எத்தகைய அப்யாசமும் தேவைப்படவில்லை. “அருணாசலம்” என்ற சொல்லைக் கேட்ட மாத்திரத்தில் அகமாயை நீங்கப்பெற்று, பேச்சு மூச்சடக்கி உள்ளாழ்ந்து பரத்தில் ஒன்றியவர் பகவான். சீக்கிய குருவாகிய குருநானக் மிகச் சிறுவயதில் கோதுமை விற்கும் கடையில் பணிசெய்து கொண்டு இருந்தார். இறையருள் காரணமாய் அவரின் ஆழ்மனதில் இறைஎண்ணம் முகிழ்ந்து இருந்தது. தானியம் அளக்கும்போது, ஏக்-தோ-தீன் (ஒன்று-இரண்டு-மூன்று) என்று அளந்துகொண்டு இருந்தார். அளந்துகொண்டு வந்த சமயம், பதின்மூன்றாவது படியை அளக்கும்போது, பதின்மூன்று என்பதற்கான இந்தி எண்ணாகிய ‘தேரா’ என்று அளந்தார். அப்போது ‘தேரா’ என்ற சொல்லின் மற்றொரு பொருளாகிய ‘நான் உனதுடைமை’ என்பது சட்டென மனதில் ஒளிர்ந்தது. “இறைவனே! நான் உனதுடைமை” என்பதையே திரும்பத் திரும்ப எண்ணி, சமாதியில் ஆழ்ந்தார். பகவானும் “அருணாசலம்” என்ற பெயரைக் கேட்ட மாத்திரத்திலேயே ஞானவழியில் மடைமாற்றம் ஏற்பட்டது. உள்ளம் மற்றப் பொருட்களை எல்லாம் நீத்து, இறைவனை நோக்கிப் பாய்ந்தது. இந்தப் பாய்ச்சல் மதுரை இல்லத்து மாடி அறையில் இறப்புணர்வை அப்யசித்ததின் மூலம் அருணாசலத்துடன் ஒன்றியது. பின்னர் கண மாத்திரத்தில் பேரருளின் சுவையைப் பெற்றவர், பேரருட்கடலாகவே மாறி, வந்தவர் அனைவருக்கும் வற்றாத அருள் அமுதத்தினை வாரி வழங்கினார்.

ஃப்ரான்சிஸ் தாம்ஸன் என்னும் ஆங்கிலக் கவிஞர், ‘Hound of Heaven’ (‘மேலுலக வேட்டைநாய்’) என்னும் கவிதையில் வேட்டை நாயாகிய தன்னைக் கண்டு அஞ்சி ஓடுகின்ற முயலாகிய ஜீவனைத் தொடர்ந்து பின்பற்றி செயல் ஓய்ந்த நிலையில் அதைப் பிடித்து விழுங்கித் தன்வயப்படுத்தும் உருவகக் கவிதை அளிக்கிறார். அதுபோலவே, ஜீவனை அருணாசலக்

கடவுள் சிக்கெனப் பிடித்த பெருமையை பகவான் வியந்து பாடுகிறார்.

*பெயர் நினைத்திடவே பிடித்திழுத்தனை உன்*
*பெருமை யார்அறிவார் அருணாசலா*

பகவான் தத்துவத்தின் ஊற்றுக்கண், பரம்பொருளே நேரிடையாகத் தொடர்பு கொள்ளும் தவிர்க்க முடியாத தெய்வீக உந்துதலே. இதுவே தன்னை அறிவதில் முடிகிறது. இந்த 'நானைத்' தேடும் உள்நோக்கிய திருப்பத்தில் பரம சத்யத்தின் உள்வாங்கும் முயற்சியில் சாதகன் செலுத்தப்படுகிறான். பகவானின் உபதேசத்தாலும் அவரது பேரருளாலும், சாதகனின் பயணம் பரம்பொருளை நோக்கியதாக அமைகிறது. அதுவே 'நான்' அதுவே பரம்பொருள். அதுவே அருணாசலம்.

பகவானின் அருளுரைகள் தன்னைப் பற்றியும் ஈஸ்வர-ஜகத்-ஜீவன் பற்றியதான உண்மையை நேருக்குநேர் உணர வைப்பது. அவரது உபதேசங்கள், சாதகர் அவரவர் வரையறையை உணர்ந்து 'அதிகார பேதம்' என்பதை உணர்த்துவது. இன்னமும் பக்குவப் படாதவர்களிடம் புலனாகாத தத்துவத்தை அவர் வலிந்து திணிக்கவில்லை. எல்லாவற்றிற்கும் திறவுகோலான ஞானம் அவர் கைவசம் இருந்தது.

*அவரவர் தமதமது அறிவறி வகைவகை*
*அவரவர் இறையவர் எனவடி அடைவர்கள்*

என்ற நம்மாழ்வார் கூற்றுப்படி, அவரவர் நிலைக்குத் தக்கபடி அவரது உபதோசம் அமைகிறது. அவர் கூறும் துறவு புறத்தே அமைவதல்ல - அகத்தே அமைவது. அவரே இதற்கு வாழும் உதாரணமாக அமைந்தார். அதிகாலை மூன்று மணிக்கே எழுந்து, பக்தர்களின் காலை உணவு இட்டிலிக்கு சட்டினி அரைக்கும் சத்குருவை வேறு எங்கேனும் கண்டுள்ளீர்களா! அவர் உடல் எச்செயலில் ஈடுபட்டு

இருந்தாலும், அவரது இதயம் நிர்மலமான பரம ஞானத்திலேயே ஒன்றி இருந்தது. உலக இயக்கத்தினை பன்முக்த தன்மையோடு, இதயத்தில் எப்போதும் அதிர்ந்துகொண்டு இருக்கும் பரமார்த்த ஒருமையும் ஒருங்கே இருந்தது.

அதேசமயம் ஞான சிகரமான பகவானின் உள்ளம் அருணாசலத்தின்மீது ஆழ்ந்த பக்தியும் ஒருங்கே அமைந்திருந்தது. அவரது அருள் வாக்கில் எழுந்த கவிதைகள் நம் இதயங்களைக் கண்ணீரில் குளிப்பாட்டுகின்றன. அருணாசலத்திலிருந்து சுரக்கும் தெய்வீக அருள்நதி அனைவரையும் ஆன்மீகத்தில் முக்குளிக்க வைக்கிறது.

அந்த சிவன் என்னும் பரம்பொருளின் ஸ்வரூப லக்ஷணமாக அருணாசல கிரியும், தடஸ்த லக்ஷணமாக பகவானும் நிலைபெற்று உள்ளனர். பகவானின் ஒவ்வொரு சொல்லும் ஒரு மந்திரச் சொல்லாகும். பகவான் நம்மைப்போல் முன்பிறவியின் கர்மவினையின் நிர்ப்பந்தத்தால் பிறப்பெடுத்தவரல்ல. பகவானே நவமணிமாலையில் வெளிப்படுத்தும் ரகசியம், தெய்வீக உணர்வின் நேரடி மனித உலகம் எங்ஙனம் ஆன்மிக உணர்வைப் பெறுவது என்று திளைத்து நிற்கையில், ஆன்ம ஞானத்திற்கு ‘ஆன்ம விசாரம்’ என்னும் நேர்வழியைக் காட்ட வந்தவர் பகவான். புதிய அனுபவ எல்லைகளைக் காட்ட வந்தவர் இருப்புணர்வு என்னும் மையத்தை அடைய புதியதோர் நேர்வழி அமைத்தவர். ஆன்மிகச் சிகரமாய் விளங்கிய போதும், சாமான்ய மக்களிடமிருந்து அப்பால் தன்னை விலக்கிக் கொண்டதே இல்லை பகவான்.

ஆன்மிக வாழ்வில் நமது முயற்சிக்கு அப்பால் பல உள்ளன. இறையருளின் உதவியால்தான் மட்டுமே அவற்றை அறிய முடியும். அருள் என்பது தானாகவே வந்து சேரும் தெய்வீக அன்பு. நாமோ

*இந்த தெய்வீக அருளின் வருகையை மறந்து வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.*

*மஹாபாரதத்தின் பகுதியான ‘சனத் சுஜாதியத்தில்’ ‘நான் யார்’ என்பதை உணர நான்கு தேவைகளைக் குறிப்பிடுகிறார். 1) சாஸ்திரம்: கொள்கைகள், வழிமுறைகள் பற்றிய அறிவு 2) உத்ஸாஹம் விடாத முயற்சி 3) வழிகாட்டும் சத்குரு 4) காலம். பகவானது வழிகாட்டுதலோ இவற்றை எல்லாம் தாண்டியது. உலகிலேயே மிகச் சுருக்கமான, அதேசமயம் மிகவும் சக்திவாய்ந்த ஒன்று ‘நான் யார்’ என்பதை விசாரித்து அறிதலே அது. இதுவரை மனித மனம் சிறைப்பட்டுக் கிடந்த எல்லாக் கொள்கைகளையும் கட்டறுத்து நேரடியாக தெய்வீகத்தை உணர்த்தும் வழி அது. இந்தத் தேடலில் தீவிரமாக இருப்போர்க்கு உன்னத நிலை கிடைக்கும்.*

*“பகவான் ஒரு பழைய பாரம்பரியம் அல்ல; அவர் ஒரு வாழும் பாரம்பரியம். இன்றைய செயற்பாடு” என்று அறிஞர் M.P. பண்டிட் கூறுகிறார். நாம் ஆழ்ந்த உணர்வுடன் தேடினால் நமக்கு அகப்படுவார். அவர் உபதேசங்களை ஆழ்ந்து பயின்றாலே அவர் வசப்படுவார்.*

*“யான் உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்” என்னும் மணிவாசகர் அனுபவம் நமக்கு வழிகாட்டி அவரை உள்ளன்போடு நேசிக்க, நம் உள்ளத்தைத் தூய்மைப்படுத்தும் முயற்சியும் முழு ஈடுபாடு மட்டுமே அவருடன் நெருக்கமான தொடர்வை ஏற்படுத்துகிறது. லூஸி கார்நெல்ஸன் பகவானைப் பற்றிக் கூறும்போது மிக அழகாக வர்ணிக்கிறார்: “அவர் தனது பாதத்தை பூமியிலும் இதயத்தை இறைவன் பாதத்திலும் பதித்தவர்.”*

*இல்லறம் துறவறம் இரண்டில் இல்லறம் துறந்து துறவறம் பற்றினால்தான் ஞானம் சித்திக்குமா என்ற கேள்விக்கு பகவான் இரண்டுமே ஒன்றுதான். எந்தவித வாழ்க்கையைப் பின்பற்றினாலும், தன்*

முனைப்பு இல்லாமல் செயலாற்றி வந்தால் முக்தி சித்திக்கும் என்கிறார். தாயுமானவர் பாடல் இதனை விளக்குவதையும் கூறலாம்.

*சாட்டையில் பம்பர ஜாலம் போல் எலாம்*
*ஆட்டுவான் இறைஎன அறிந்து நெஞ்சமே!*
*தேட்டம்ஒன்று அற, அருள் செயலில் நிற்றியேல்,*
*வீட்டறம் துறவறம் இரண்டும் மேன்மையே.*

என்னும் பாடல் இதனைத் தெளிவுபட உரைக்கிறது.

இறுதியிலே ஸத்குருவின் பேரருள் பற்றி திருவருட்பா அண்ணாமலைப் பதிகம் கூறுவதில் நிறைவு செய்வோம்.

*இலகுபரி பூரண விலாசம்அல திலைஅண்டம்*
*எங்கணும் எனச்சொல்பதியே*
*இரவுபகல் அற்றஇடம்அதுசகல கேவலம்*
*இரண்டின்நடு என்றபரமே*
*இச்சைமன மாயையே கண்டன எலாம்அவை*
*இருந்துகாண் என்றதவமே*
*யான்பிறர் எனும்பேத நடைவிடுத் தென்னோடு*
*இருத்திஎன உரைசெய்அரைசே*
*என்களைக ணேஎனது கண்ணேஎன் இருகண்*
*இலங்குமணி யேஎன்உயிரே*
*என்உயிர்க் குயிரேஎன் அறிவேஎன் அறிவூடு*
*இருந்தசிவ மேஎன் அன்பே*
*என்தெய்வ மேஎனது தந்தையே எனைஈன்று*
*எடுத்ததா யேஎன்உறவே*
*என்செல்வ மேஎனது வாழ்வேஎன் இன்பமே*
*என்அருட் குருவடிவமே!*

*மீண்டும் உரையாடல் பகிர்வோம்!*

பகவான் பணியில் தங்கள்,

ராம் மோஹன்

# ஔவைக் குறள்

## விளக்கம்: ராம் மோஹன்

### 17. உருபாதீதம்

*161.* *கருவின்றி வீடாங்கு கருத்துற வேண்டில்*
*உருவின்றி நிற்கும் உணர்வு.*

*பொருள்: நம் செயல்கள் அனைத்துக்கும் கருவாய் இருப்பது மனமே. அம்மனத்தை அசைவின்றி ஆத்மாவில் பதித்தால் கரணங்களாய புத்தி, அஹங்காரம், சித்தம் அனைத்தும் தானே தானே தத்துவம் என்று பகவான் கூறும் நிலையில் முற்றிலும் ஒடுங்கி இருக்கும். மனம் அசைவற்று நிற்கும் அந்நிலையில், இதுகாறும் வெளிவிஷயங்களை ஆய்ந்துகொண்டு இருக்கும் அறிவாகிய உணர்வு, உருவம் பொருள் எதையும் பற்றாது, உருவற்ற நிலையில் நிற்கும்.*

*விளக்கம்: இந்த மனம் அசைவற்று நிற்கும் நிலையையே "மாற்ற மனம் கழிய நின்ற மறையோன்" என்று மணிவாசகர் சிவபுராணத்தில் குறிப்பிடுகிறார்.*

*162.* *பிறத்தல் ஒன்றின்றிப் பிறவாமை வேண்டில்*
*அறுத்துருவ மாற்றி யிரு.*

*பொருள்: அந்தக்கரணங்களாகிய மனம், புத்தி, சித்தம் மற்றும் அகங்காரம் நான்கும் ஜீவன் உற்பத்தி ஆகும்போதே அதனுடன் சேர்ந்து உதிக்கின்றன. அவை செயலிழக்க வேண்டுமாயின் தோன்றுவதற்கான மூலகாரணமாகிய 'நான்' என்னும் உணர்வை அது தோன்றும் இடத்தை ஆய்ந்து அறிந்து ப்ரணவத் த்யானத்தின் மூலம் அல்லது 'நான் யார்' என்னும் ஆத்ம விசாரத்தின் மூலம் நீக்கி, அசைவற்று இருப்பாயாக.*

*‘நான்’ என்னும் தன்முனைப்பு ‘அஹம் பிரம்மாஸ்மி’ என்னும் ஞான உணர்வுக்கு எதிரானது. பதஞ்சலி உபதேசிக்கும் ‘பிரதிபக்ஷ பாவனை’ - நான் உடல் மனம் சிற்றறிவு என்ற நிலைக்கு மாறான நான் பிரம்மம் என்னும் பரமாத்ம உணர்வை இதயத்தில் சதா நிறுத்திக்கொண்டு இருந்தால் அஞ்ஞானத்திற்கு மூலகாரணமான துவைத-பேத நிலையைக் கடக்கலாம்.*

*இதனையே கண்ணன் கீதையில்,*

***அஸங்க[3] ஶஸ்த்ரேன த்[3]ருடே[4]ந சி[2]த்த்வா***

*என்று குறிப்பிடுகிறார்.*

***163.** உருவங்கள் எல்லாம் மறுத்துஅற மாற்றில்*
*கருவேது மில்லை தனக்கு.*

*பொருள்: அஞ்ஞானத்திற்குக் காரணமாகிய ‘நாம-ரூப’ கற்பனைகள் அடிமனத்திலிருந்து பெயர்த்து எண்ணங்களை எழுந்த ஆத்ம அதிஷ்டான (அடிப்படை) நிலைக்கு பூர்ணமாக மாற்றிவைத்து, அதிலேயே படர்ந்து இருந்தால் அஞ்ஞானத்தினால் எழும் குழப்பங்கள் ஒழியும்.*

*நம்மைத் தொடர்ந்து சூட்சுமமாகப் பற்றும் விருப்பு-வெறுப்புகள் செயலிழந்து அழிகின்றன.*

***164.** கறுப்பு வெளுப்பு சிவப்புறு பொன்பச்சை*
*யறுத்துருவம் மாற்றி இரு.*

*பொருள்: பஞ்ச பூதங்களின் சக்தியை இங்கே ஔவையார் குறிப்பிடுகிறார்.*

*கறுப்பு - வாயுசக்தி*

*வெளுப்பு - வாயுசக்தி*

*சிவப்பு - அக்னி சக்தி*

*பொன் - பூமி சக்தி*

*பச்சை - நீர் சக்தி*

ஆத்மிகப் பயிற்சியின் மூலம் இந்தப் பஞ்சபூத சக்திகளை எல்லாம் மனவெளியில் இருந்து பெயர்த்து அவற்றைத் திறன் அற்றவை ஆக்கி, அவற்றை மூலமாகிய பிரணவத்தில் பூர்ணமாகச் சேர்த்து மனம் அசைவற்ற நிலையில் இரு.

இதே கருத்தைத் திருமந்திரத்தில் திருமூலர் பாடுகிறார்:

**அஞ்சுள சிங்கம் அடவியில் வாழ்வன**
**அஞ்சும்போய் மேய்ந்துதம் அஞ்சுஅக மேபுகும்**
**அஞ்சின் உகிரும் எயிரும் அறுத்திட்டால்**
**எஞ்சாது இறைவனை எய்தலும் ஆமே.**

– (திருமந்திரம் 2026)

சிங்கம்: இந்திரியம் ஐந்து இந்திரியங்கள் ஐந்து சிங்கங்கட்கு ஒப்பிடப்படுகின்றன.

உகிர்: நகம்; எயிறு: கோரைப் பற்கள்

உடலே ஒரு காடாகவும், ஐந்து இந்திரியங்களும், ஐந்து சிங்கங்களாகவும் உருவகிக்கப் பட்டுள்ளன. இவ்வைந்தும் புறத்தே சென்று அலைந்து, புறப்பொருட்களை நுகர்ந்து பின் தன் குகை (அஹம்) வந்து சேரும். மீண்டும் வெளியே கிளம்பும். சிங்கத்தின் கூரிய நகங்களையும் பற்களையும் அறுத்துவிட்டால், அது வேட்டைஆடுதலை நிறுத்திவிடும். அதுபோன்றே ஐந்து இந்திரியங்களின் புறப்பொருள் கிளர்ச்சியை நீக்கி விட்டால் அவை உள்ளத்தே ஒடுங்கும்.

மீண்டும் ஒரு திருமந்திரப் பாடலில் திருமூலர் கூறுகிறார்:

**பாய்ந்தன பூதங்கள் ஐந்தும் படர் ஒளி**
**சார்ந்திடும் ஞானத் தறியினில் பூட்டு இட்டு**
**ஆய்ந்து கொள் ஆனந்தம் என்னும் அருள் செய்யில்**
**வேய்ந்து கொள் மேலை விதி அது தானே.**

(விதி=முறை)

ஐம்பூதங்கள் ஆகிய புலன்கள் ஐந்தும் புறத்தே பாயும் தன்மை உடையன. நமது முயற்சியால் மட்டுமே இந்தப் பஞ்ச பூதங்களின் வெளிப் பாய்ச்சலைத் தடுத்து நிறுத்த இயலாது. இவை சத்குருவின் அருளால் மட்டும் இப்பாய்ச்சலைத் தடுத்து நிறுத்த முடியும். இந்திரியங்களையும் இந்த சங்கங்களின் வெளிப்பாய்ச்சலை குரு அருளால் தடுத்து நிறுத்தி, சிவ பஞ்சாட்சரம் என்னும் கயிற்றால், இறைவன் திருவடியாகிய கட்டுத்தறியில் கட்ட வேண்டும். அங்ஙனம் செய்வார்க்கு - முக்தி என்னும் பேரின்பம் கிடைக்கும் என்று இத்திருமூலர் வாக்கின் பொருள்.

*165. அனைத்துஉருவம் எல்லாம் அறக்கெடுத்து நின்றால்*
*பினைப்பிறப்பு இல்லையாம் வீடு.*

பொருள்: நம் மனத்தின் குழப்பங்களுக்கும், அஞ்ஞானத்துக்கும் அடிப்படைக் காரணம் நாம-ரூபங்களோடு நம்மைப் பிணைத்துக் கொள்வதுதான். நம் உள்ளத்தே இறுக்கமாய்ப் பற்றிக்கொண்டு உள்ள நாம-ரூபத்துடன் கொண்ட தொடர்பை முற்றிலும் அறுத்து, அசைவற்ற மனம் நிலைபெற்றால் எண்ணங்கள் மீண்டும் மீண்டும் உதித்து நம்மைத் தொல்லைப்படுத்தி, பிறப்பு-இறப்பு சங்கிலியில் சிக்க வைக்கிறது.

மனம் அசைவற்று அழிந்த நிலையில் இருந்தால் பிறப்பு-இறப்பு எதுவுமே இல்லை.

*166. நினைப்பு மறப்புஅற்று நிராகரித்து நின்றால்*
*தனக்கொன்று மில்லை பிறப்பு.*

பொருள்: நினைப்பும் மறப்பும் அற்ற நிலையில் சாஸ்வதமாக இருந்து, மற்றும் மனத்தில் ஸம்ஸ்காரத்தால் எழும் மாயத் தோற்றங்களை மறுத்துத் தள்ளிவிட்டால் உள்நோக்கிய உணர்வுடன் செய்யப்படும் தவம் இடையூறின்றி முக்தி நிலையை நோக்கிச் சாதகனைச் செலுத்தும்.

*கோதில்லா முக்திமொழிதானே கிளத்திடுவான்*
*நாடிஎலாம் 'நான் பிரம்மம்' என உண்ணும் கீர்த்தியான்*
*– (சங்கரரின் 'கௌபீன பஞ்சகம்')*

*167. குறித்துருவம் எல்லாம் குறைவின்றி மாற்றில்*
*மறித்துப் பிறப்பில்லை வீடு.*

பொருள்: ஸம்ஸ்காரத்தின் காரணமாக மாற்றி மாற்றி தோன்றிக்கொண்டே இருக்கும் நாமரூபம் தொடர்பான எண்ணங்கள் எங்கே உதிக்கின்றன என்று கண்டு, அதை அகந்தைக் கலப்பின்றி நோக்கும்போது, எண்ணங்கள் தோன்றாது அழிந்து விடும்.

*168. பிதற்றும் உணர்வை அறுத்துப் பிரபஞ்ச*
*விகற்பம் உணர்வதே வீடு.*

பொருள்: ஔவையார் 'வீடுபேறு' என்பதற்கு இங்கு அழகான விளக்கம் தருகிறார். நீர் உயரிய ஆன்மிக நோக்கில் நிலைத்து நில்லாது, மனம் போன போக்கெல்லாம் பிதற்றித் திரியும் சஞ்சல உணர்வைக் கட்டோடு அறுத்து, 'அஹம் பிரம்மாஸ்மி' என்ற பரம ஞானத்தில் நிலைபெறுதலே வீடு என்கிறார் ஔவையார்.

*169. பிறப்பறுக்க வீடாம் பேருவமை இன்றி*
*அறுத்துருவம் மாற்றி யிரு.*

பொருள்: சரியான ஞானப் பயிற்சியின்மையால் மீண்டும் மீண்டும் எழும் அஞ்ஞான விருத்திகளை நாசம் செய்ய, பிரணவ ஜபத்தைக் கைக்கொண்டோ அல்லது சாதன சதுஷ்டம் அப்யஸிப்பதின் மூலம் பற்றுக்களை நீக்கி, ஆத்மாவில் ஒன்றுக.

*170. ஓசை உணர்வோடு உயிர்ப்பின்மை அற்றக்கால்*
*பேசவும் வேண்டா பிறப்பு.*

பொருள்: இடையறாப் பேச்சு, கொந்தளிக்கும் உணர்ச்சிகள், பிராணாயாமத்தின் மீது கவனமின்றி இருப்பது ஆகியவற்றை ஒதுக்கி, மெய்யுணர்வில் சித்தத்தைப் பதிக்க, பிறப்பு அழிந்து முக்தி சித்திக்கும்.



# பேரமைதி நிலவிய பெருநாட்கள்

## மூலம்: மௌனிசாது

## தமிழாக்கம்: ராம்மோஹன்

### 25. ஆலய வளாகத்தில் இன்னிசைக் கச்சேரி

இன்று பகவானின் கட்டிலுக்கு எதிரே பல வண்ணங்கள் கொண்ட போர்வையால் மூடப்பட்ட இரண்டு பெரிய மரப் பெட்டிகள் வைக்கப்பட்டிருந்ததைக் கண்டேன். வட இந்திய பாணியில் உடை தரித்து இருந்த இருவர் அவற்றின் அருகே நின்றுகொண்டு இருந்தனர். நூல் நிலையம் திறந்திருந்த வேளைகளில் பல சமயம் என்னுடன் உரையாடல் செய்பவரான நூல் நிலையக் காப்பாளராம் அந்தணர் என்னிடம் அன்று பிற்பகல் பகவான் முன்னிலையில் சமயம் சார்ந்த சங்கீதக் கச்சேரி நடைபெற உள்ளதாகவும் அங்கு நின்று கொண்டிருக்கும் இருவர் புகழ்பெற்ற சங்கீத வித்வான்கள் என்றும், அவர்கள் ஹார்மோனியம் இசைத்துப் பாடுவார்கள் என்றும் தெரிவித்தார். வழக்கமாக இல்லாதபடி ஆலய மண்டபம் அன்று முற்றிலும் மக்களால் நிறைந்து இருந்தது.

பகவானை வணங்கிய பின்னர் அவ்விசை வல்லுநர்கள் தமது கச்சேரியைத் துவங்கினர். இன்னிசை தரும் ஒரு பெரிய இசைக் கருவியை மூத்தவர் வாசிக்க, இளையவர் தனது இசைக் கருவி மூலம் அவரைப் பின்தொடர்ந்தார். அது பாரம்பரிய இசை

முறையில் கிழக்கத்திய இசையைக் கலந்து வழங்கும் ஒரு விநோதக் கலவையாய் இருந்தது. அது இரவு நேரங்களில் குருதேவர் முன்னால் தியான வேளையில் சீடர்கள் பாடும் பாடல்களை ஒத்திருந்தது.

பகவானோ, தம் வழக்கம்போல் ஏதோ ஒரு தொலைதூரப் பொருளில் தமது கருத்து ஆழ்ந்து பதித்து இருப்பது போன்று உள்ளாழ்ந்த நோக்கில் இந்த இசையையே கேளாதவர்போல் அமர்ந்து இருந்தார். ஒரு மணி நேரம் பாடிய பிறகு, மீண்டும் பகவானின் பாதங்களில் வீழ்ந்து வணங்கி கூடத்தில் அமைதியாக அமர்ந்தனர். எந்தக் கருத்தினை இவர்கள் மையப்படுத்தி இவர்கள் தமது பாடல்களைப் பாடினார்கள் என்பதை அறிய நான் மிகவும் ஆவல் கொண்டு இருந்தேன். நான் கண்ட வரை முதலாவது பாடகர் ஹார்மோனியத்தின் விசைகளைத் தொடாமலேயே ஒலி எழுப்புவதுபோல் இருந்தது. இரண்டாமவரோ தனது விரல்களை ஹார்மோனியப் பெட்டிமேல் அழுத்தி வாசித்ததுபோல் இருந்தது. ஆனால் அங்கு இசைக்கின்ற விசைகள் எதுவுமே இருப்பதுபோல் தெரியவில்லை. நான் அமர்ந்த இடத்தில் இருந்து இதைத் தெளிவாகக் காண இயலவில்லை. நான் மின்சார ஹார்மோனியத்தைப் பற்றிக் கேள்விப் பட்டுள்ளேன். அதில், வித்வானின் விரல்கள் பெட்டியை நெருங்கும்போதே அவர் வீசுகின்ற கரம் எழுப்பும் அலைகளினாலும் அது ஹார்மோனியத்திலிருந்து இருக்கும் தூரத்தினைப் பொறுத்தும் வெவ்வேறு சுருதிகள் வெளிப்படுகின்றன. ஒருவேளை இந்த வாத்தியம் மின்சார ஹார்மோனியத்தை ஒத்ததோ? ஆனால் நான் அந்தக் கூடத்தில் எங்குமோர் மின்சார பெட்டிகளையோ அவை வயர்களினால் ஹார்மோனியத்தில் இணைக்கப் பட்டிருப்பதையோ காணவில்லை. எங்கிருந்து இந்த ஹார்மோனியத்துக்கு மின்சக்தி கிடைக்கும்?

நான் இரவு தியானத்தை முடித்து வெளியே செல்லும்போது ஆசிரமப் பணியாளர் ஒருவர் இரவு உணவுக்குப் பின் திரைப்படக் காட்சி ஒன்று காட்டப்படும் என்று கூறினார். ஆச்ரமம் அருகாமையில் வசிக்கும் ஏனைய ஐரோப்பிய, அமெரிக்க அன்பர்களையும் அழைக்கும்படி என்னிடம் அவர் கூறினார்.

இரவு 8 மணி அளவில் காட்சிக் கூடம் நிரம்பி வழிந்தது. இந்தக் கூடத்தில் ஒரு திசையில் ஒரு வெண் திரையும் அதற்கு நேர் எதிரே ஒரு பிலிம் புரொஜெக்டரும் வைக்கப்பட்டு இருந்தன.

என்னால் அழைக்கப்பட்ட மேலைநாட்டு நண்பர்களும் சீக்கிரமாகவே வந்து விட்டனர். நான் ஒரு பலகணியின் அடி பீடத்தில் சௌகர்யமாக இடம் பிடித்து அமர்ந்து கொண்டேன். என் பக்கத்தில் என்னுடன் பலமுறை அளவளாவி இருந்த நளினி என்னும் பம்பாயைச் சேர்ந்த பக்தை அமர்ந்து இருந்தார். கல்கத்தாவைச் சேர்ந்த ஒரு செல்வந்தரின் பதினைந்து வயது சிறுமியும் எம்மருகில் அமர்ந்து இருந்தார்.

திருவண்ணாமலை நகரின் உயர் அலுவலர்கள், பெரிய காக்கி உடையில் இருந்த போலீஸ் சூப்பிரண்டெண்ட், ஜில்லா மருத்துவ அதிகாரி, பல நீதிபதிகள், வழக்கறிஞர்கள் அனைவரும் அங்கே அமர்ந்து இருந்தனர்.

ஒரு சில மாற்றங்கள் செய்த பின்னர், படம் தொடங்கியது. இது பகவானின் வாழ்க்கை வரலாற்று சித்திரம். அவர் வாழ்வின் பல்வேறு நிகழ்ச்சிகள் திரைப்படத்தில் காட்டப்பட்டன. அவர் அருணகிரியின் மீது ஏறிச் செல்வது, ஆஸ்ரமத்தினுள் அவர் மெதுவாக நடந்து செல்வது, அங்கு நடைபெற்ற விழாக்களில் அவர் பங்கேற்பது போன்ற பல நிகழ்வுகளை இத் திரைப்படத்தில் நான் கண்டேன். பகவானை அழகிய

*வண்ணப் படங்களில் காட்டும் இந்தத் திரைச் சித்திரம் அழகாக அமைந்து இருந்தது. இந்தத் திரைச் சித்திரத்தில் அங்கு அமர்ந்துள்ள பல்வேறு மனிதர்களை நான் கண்டேன். போலீஸ் சூப்பிரண்டெண்ட், ஆச்ரமத்தில் பணிபுரியும் பல்வேறு அந்தண ஊழியர்கள் போன்றோர் அந்தத் திரைப்படத்தில் காணப்பெற்றனர்.*

*இந்திய சாரணர் குழுவைச் சார்ந்த சிறுவர் பலரும் ஆஸ்ரமத்தில் உணவு அருந்துவதை படத்தில் கண்டேன். பகவானிடம் ஆழ்ந்த பக்தி கொண்ட ஓர் அமெரிக்க மாது பகவானின் அருகாமையில் நடந்து செல்வதைப் பல காட்சிகளில் கண்டேன்.*

*பகவான், அவரது வழக்கமான உணர்வேதும் காட்டாத முகத்தில் இப்போது ஒரு சிறு புன்னகை தெரிந்தும் தெரியாமலும் தவழ அதைப் பார்த்துக் கொண்டு இருந்தார். மனதில் ஓர் எண்ணம் எழுவதை என்னால் தவிர்க்க இயலவில்லை, எதிர்கால சந்ததியினர்க்காக பகவானின் உருவம் நிரந்தரமாக இப்படத்தின் மூலம் எழுப்பப்பட்டு உள்ளது எனினும், மிகச்சிறு காலமே பகவானின் அருகாமையில் இருந்தாலும் அந்தத் தெய்வீக உருவம் அளிக்கும் அருளை வழங்கும் பேரருளையும் ஆனந்தத்தினையும் இப் படங்கள்தான் ஈடுசெய்ய இயலுமா?*

**ரமணோதயம்**

Voluntary Services

K. *சுரேஷ் ஜானகிராமன்* *9444127770*

*ராஜேஷ்* M.S. *9840075778*

# தவமும் ஸ்வாத்யாயமும் பகவானின் வாழ்க்கையே உதாரணம்

**ராம் மோஹறன்**

ஒரு மனிதனின் தலையாய கடமை யாதெனில் தவமும் ஸ்வாத்யாயமுமே என்று தைத்ரிய உபநிஷதம் கூறுகிறது. தவம் என்பது 'தப்' என்ற சம்ஸ்கிருத சொல்லின் அடியொற்றிப் பிறந்தது. 'தப்' என்பது வெம்மையைக் குறிப்பிடும் சொல். 'தவம்' என்பது ஒரு சாதகன் தீவிரமாக சாதனையில் ஈடுபடும்போது, அபரீதமான சக்தி வெளிப்படுவதைக் குறிப்பிடுகிறது. உலகியலில் கூட வெப்ப சக்தியே இயக்கங்கள் அனைத்திற்கும் காரணமாய் இருப்பதை அறிவோம் அல்லவா!

அனைவரும் கடைப்பிடிக்க வேண்டிய மூன்று சீலங்கள் ஸத்யம், ருதம், தபஸ் என்பதாகும். ஸத்யம் என்பது எப்போதும் உண்மையைப் பின்பற்றுதல். இதுவே வ்யவஹாரிக ஸத்யம், பரமார்த்திக ஸத்யம் என்று இருவகையாக விளங்கப்படுகிறது.

பரமார்த்த ஸத்யம் என்பது எந்நிலையிலும் வேறுபடாதது (Absolute Truth). வ்யவஹாரிக ஸத்யம் என்பது சந்தர்ப்ப நிலைக்கு ஏற்றபடி வேறுபடும் Relative Truth. உதாரணமாக சூரியன் கிழக்கில் உதித்து மேற்கில் மறைவது உண்மைதானே! அதை நாம் தினந்தோறும் காண்கிறோமல்லவா? அது ஒரு வ்யவஹாரிக ஸத்யம். ஆயினும் அது வரையறை அற்ற

பேருண்மையா? அல்ல. பேருண்மை என்னவெனில், சூரியன் தோன்றுவதும் இல்லை; மறைவதும் இல்லை. அது இருந்த இடத்தில்தான் உள்ளது. பூமிதான் அதைச் சுற்றி வருகிறது.

இந்த பூமியின் சுழற்சியால், சூரியன் தோன்றி மறைவதைப் போல் தோன்றுகிறது. இதுவே வ்யவஹாரிக ஸத்யம்.

இதையும் தாண்டிய இறுதி நிலையில் உள்ளது ருதம். இதனை cosmic order என்று கூறலாம். பிரபஞ்ச இயக்கத்தினை ஒழுங்குபடுத்திச் செலுத்தும் பேரியக்கம்தான் ருதம் எனப்படும்.

‘ஸத்யமேவ ஜயதே; ந அக்ருதம்’ என்ற உபநிஷத வாக்கின்படி ஸத்யம் எப்போதும் வெல்லும். அது ஏதோ ஒரு காரணத்தால் மாறுபட்டாலும் ருதம் எனப்படும் பிரபஞ்ச நடைமுறையை இயக்கும் பெரும் சக்தி என்றுமே மாறுபடாது என்கிறது உபநிஷதம்.

எங்கும் நிலவியுள்ள உண்மை ஸத்யம். சாமான்ய நிலையில் உள்ள ஒருவனை, ‘நீ சாதாரணமானவன் அல்ல; நீ பரம்பொருளின் கூறு. அதை அறிவாய்’ என்று தியானம் என்னும் உஷ்ணத்தை ஏற்படுத்தி உந்திச் செலுத்தி இயக்கும் உள்ளுணர்வே தபஸ்.

அடுத்ததாக ‘ஸ்வாத்யாயம்’ என்பதைக் காண்போம். ‘ஸ்வாத்யாயம்’ எனில் தான் தானாகவே கற்றுத் தன்னை உணர்தல் என்று பொருள்படும். ஒருவன் பலநூல்களை அறிந்தாலும், அது வெளிநாட்டத்திலேயே உள்ளது. அவன் தன்னைத் தானே ‘யார்’ எனக் கற்று உள்ளத்தே பதிய வைக்கிறானோ, அவ்வறிவியலே அவனுடைய உண்மையான ஞான வரம்பு உள்ளது.

**நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றும்தன்**
**உண்மை அறிவே மிகும் (குறள் 373)**

என்று வள்ளுவர் கூறுகிறார்.

'ஸ்வாத்யாயம்' என்ற சொல், ஸ்வ+அத்யாயம் என்று இரு பகுதிகளைக் கொண்டது. சுயமாகக் கற்றுக் கொள்வது என்று மேலாகப் பொருள் கொள்ளலாம்.

ஸ்வாத்யாயமே அவனது செயல்களிலும் எல்லாப் பரிமாணங்களிலும் வெளிப்பட்டு, அந்தக் காலத்தில் வாழும் ஏனையோர்க்கு வழிகாட்டியாக அமையும் இதையே தைத்ரியம்,


'ஸ்வாத்யாயப்ரவசநே ச'

என்று கூறுகிறது. தன் ஆத்மிகப் பேருண்மையை உணர்து, அதிலேயே வாழ்ந்து, அதைக் காணும் மற்றையோரும் அந்த வாழ்க்கைப் போதனையைப் பின்பற்றச் செய்கிறது.

இந்தப் பண்பு நலன்கள், வாழ்ந்து காட்ட வேண்டிய *model* எது என்பதற்கு வால்மிகி ராமாயணத்தில் நாரதரே ஒரு பட்டியல் தருகிறார்.

குணவான், வீர்யவான், தர்மக்ஞன், க்ருதக்ஞன், ஸத்யவாக்யன், த்ருட்வ்ருதன், சாரித்ர யக்தன், ஸர்வபூதேஷு ஹிதன், வித்வான், ஸமர்த்தன், ஏகப்ரிய தர்ஸனன், ஆத்மவான், ஜிதக்ரோதன், சத்யதிமான், அநஸூயன், ரோஹஸ்யன் என்று பல்வேறு அத்யாவஸ்ய குணங்களாக பட்டியலிடுகிறார்.

இந்த சம்ஸ்கிருத வார்த்தைகளைத் தமிழில் கூற வேண்டும் எனில் அவை நல்லொழுக்கம் உடைமை, எல்லா ஜீவனையும் அன்புடன் நடத்துபவன், அறிவு மிக்கவன், செய்கையில் திறமை மிக்கவன், அனைவருக்கும் தன் பார்வையிலேயே பேரன்பை வெளிப்படுத்துபவன், ஆன்மாவில் ஒளிர்பவன், சினத்தை முற்றிலும் வென்றவன், ஒளிமிக்கவன், பொறாமை சிறிதும் அற்றவன், தவறு செய்பவர் வந்து தவறான நினைப்புடன் சீண்டினால் சீறுபவர்,



*அப்போர்க் களத்தில் அவனைக் கண்டு அனைவருமே அஞ்சுவார்கள் என்பது நாரதர் தரும் பண்புப் பட்டியல்.*

*இத்தனைக் குணங்களை உடையவர் ராமபிரானைத் தவிர யாரேனும் உள்ளாரா? நம் பகவானே இத்தனை பண்புகளுக்கும் இருப்பிடம் அல்லவா? எவ்வாறு என்று காண்போமோ!*

*1. குணவான் – சகல பண்புகட்கும் உறைவிடம் பகவான். அஹிம்சை, பற்றின்மை, ஸத்யத்திலேயே ஒன்றியிருத்தல், அடக்கம், பேரன்பு போன்ற அத்தனைப் பண்புகட்கும் உறைவிடம் பகவான். பகவானே! நீங்கள் பெரும் ஞானியாவீர். நாங்கள் சாமான்யர் தாமே என்று அடியார் கூறியபோதும், நான் மட்டுமல்ல, நீங்களும் ஞானத்தின் வடிவமே. நான் அதை அறிந்துள்ளேன். நீங்கள் அறியவில்லை. அது ஒன்றுதான் வேறுபாடு என்று கூறிய பண்பின் சிகரம் பகவான்.*

*2. வீர்யவான் – வீர்யம் மிக்கவன். சாதாரண உலகியல் எதிர்ப்புகளை வெல்பவன் பெரிய வீரம் மிக்கவன் அல்லன். தன்னைக் கட்டுப்படுத்த முயலும் அத்தனை கர்ம பந்தங்களையும், ஆசைப் பின்னல்களையும் அறுத்தெறிபவனே உண்மையான வீரம். மிகச் சிறிய வயதிலேயே இத்தகைய வீரத்தின் திருவுரு பகவான். அருணை ஆலயம் அடைந்து தந்தையுடன் ஒன்றிய மறுகணமே தன் கையில் இருந்த சில்லறைகளைக்கூட நாளைக்கு வேண்டும் என்று வைத்துக் கொள்ளாது குளத்தில் எரிந்த வீரச் சிறுவன். விரூபாக்ஷ குகையில் வாழ்ந்தபோது அங்கே வந்த புலியைக் கண்டு பிறர் அஞ்சி ஒடும்போது அஞ்சாது புலித்தோழா! இவர்கள் பயப்படுகிறார்கள் பார்! இப்போது போய், பிறகு வருவாய்! என்று கூறிய அஞ்சா நெஞ்சர். எனவேதான் 'ரமண மஹரிஷியா! அவன் ஒரு மாவீரன் ஆயிற்றே!' என்று யாழ்ப்பாண சித்தர் யோகர் ஸ்வாமிகள் குறிப்பிடுகிறார்.*

*3. தர்மக்ஞன் – தர்மத்தை முற்றிலும் அறிந்தவர் பகவான். சாமான்ய தர்மம், விசேஷ தர்மம் இரண்டையுமே முற்றிலும் அறிந்தவர் பகவான். அத்தனையும் துறந்து தன்னிடம் முழு சரணாகதி செய்த ராமநாத ப்ரம்மச்சாரி, தன்னுடைய தாயின் சிரார்தத்தின்போது, ஆசார முறைப்படி காலை உணவு உண்ணாமல் இருந்ததைக் கண்டு, பூர்ண சரணாகதி செய்தவர்க்கு எத்தகைய ஆசாரமும் தேவையில்லை என்று காட்டுமுகமாக, "அப்படியா! ராமநாதனுக்கு இன்னும் இரண்டு இட்டிலி போடு" என்று விசேஷ தர்மத்தை உணர்த்தியவர். அதைக்கண்டு, தானும் அதேபோல் செய்யலாம் என்று ராஜகோபால ஐயர் சிரார்த்தத்தின்போது உண்ண முற்பட்டபோது, அவரைத் தடுக்குமுகமாக ராமநாதன் அத்தனையும் துறந்து வந்துள்ளான். ராஜகோபாலன் எதை விட்டார் என்று உலகப் பற்றினைத் துறக்காவரை சாமான்ய தர்மத்தைப் பின்பற்ற வேண்டியதை உணர்த்தினார்.*

*4. க்ருதக்ஞன் – நன்றி உணர்வு மிக்கவன். பகவானுக்கு உடல்நிலை சரியில்லாதபோது, அவருக்கு முன்னமேயே சமையல் அறை சென்று சட்டினி அரைத்துவிட்ட முருகனாரிடம், "நான் செய்ய வேண்டிய வேலையை நீயே செய்து விட்டாயே? சரி! உன் மேல்துண்டு அழுக்காய் உள்ளது அதை நான் தோய்த்துப் போடுகிறேன்" என்று கூறியவர். தன் இறுதி நாளில் தன்னுடைய அணுக்கத் தொண்டருக்கு சந்தோஷம் என்று நன்றி தெரிவித்தவர் பகவான்.*

*5. ஸத்யவான் – பகவான் ஸத்யத்திலேயே வாழ்ந்தார். அவர் சொல்லும் ஒவ்வொரு சொல்லும் ஸத்யமாகவே வெளி வந்தது. கடிதப் பையில் இங்கிலாந்திலிருந்து வந்துள்ள கடிதம் அடியில் இருக்குமே, பாருங்கள் என்று கூறியபோது, அந்த ஸத்ய வாக்கு மெய்யானது.*



6. த்ருட்வ்ரதன் – மனோதிடத்துடன் தன் கொள்கையைப் பின்பற்றுபவன். மலைமீது ஏறும்போது, தன்கால் இடித்ததால் குளவிக்கூடு கலைந்து, குளவிகள் வந்து கால்முழுவதும் கடுமையாகக் கொட்டிய போதிலும் காலை நகர்த்தாது, நான் அவர்கள் வீட்டை இடித்து விட்டேன். எனவே எனக்கு இந்தத் தண்டனை தேவை என்ற திடமான தர்ம விரதத்தைக்

கடைப்பிடித்தவர். ஆஸ்ரமத்தில் திருடர்கள் வந்து தாக்கிய போதும், அவர்களைத் திருப்பித் தாக்காதீர். அவர்கள் திருடர்கள். தமக்குரிய செயல்பாட்டை அவர்கள் செய்கிறார்கள். நாம் சாதுக்கள். நமது கோட்பாடாகிய அஹிம்சையை நாம் கடைப்பிடிக்க வேண்டும் என்று கூறிய த்ருட்விரதன் பகவான்.

7. சாரித்ர யக்தன் – நல்லொழுக்கம் மிக்கவன். தர்ம நெறியிலிருந்து சிறிதும் பிறழாத வாழ்க்கையை வாழ்ந்து அனைவருக்கும் எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர் பகவான். எல்லா ஒழுக்க நெறிகளையும் தவறாது கடைப்பிடித்தவர்.

8. ஸர்வபூத ஹிதன் – அத்தனை ஜீவராசிகட்கும் பேரன்பு காட்டியவர். இதற்கு ஏராளமான எடுத்துக்காட்டுகள் உள்ளன. உலக ஆன்மிக வரலாற்றில் தன்னைச் சரணடைந்த மாந்தர்க்கு முக்தி அளித்த ஞானிகள் பலர் உளர். ஆயினும் எந்த உயிரினத்திடமும் வேற்றுமை பாராட்டாது, ‘ஈசாவாஸ்யம் இதம் ஸர்வம்’ என்பதை உணர்ந்தும் விதமாக பசு, காகம், குரங்குகள், நாய் போன்ற அனைத்து உயிர்கட்கும் முக்தி அருளிய ஸர்வபூத ஹிதன் பகவானே. மேலிருந்து விரிசல் கண்ட பறவை முட்டையைக் கூட தன் திருக்கரத்தால் எடுத்து, ஈரத்துணியால் மூடி அதனுள்ளிருந்த கருவிற்கு மீண்டும் உயிரளித்துப் பறக்க விட்டார் பகவான். சிவ பூஜைக்கு வில்வத் துளிர்ளைப் பறிக்க முற்பட்ட சம்பூர்ணம் அம்மாவையும் கோபத்துடன் தடுத்து, ‘உன் விரல்களை ஒடித்தால் எப்படி இருக்கும்?’ என்று வினவிய கருணா ஸாகரம் பகவான்.

9. வித்வான் பேரறிஞன்:

ஏடாயிரம் கோடி எழுதாது தன்மனத்து
எழுதிப் படித்த விரகன்

என்று தமிழ்ப்பாடல் கூறுவதுபோல் எதையுமே சிரமப்பட்டுப் படிக்காமல் அத்தனையுமே அறிந்தவர்

பகவான். மிகச் சிறுவயதிலேயே பள்ளியை விட்டு நீங்கி வந்தபின், தமிழ், ஸம்ஸ்கிருதம், தெலுங்கு, மலையாளம் போன்ற மொழிகளிலும் கடினமான இலக்கணத்தைப் பின்பற்றி கவிதை யாத்தவர். கடல் போன்ற ஆன்மிக நூல்கட்கு விளக்கம் தந்தவர்.

**கஸ்மின் விக்ஞானதே ஸர்வம் இதம்**
**விக்ஞானதம் யமதி**

எதை அறிந்தபின் அத்தனையும் அறியப்படுமோ, அதனை அறிபவன் என்ற வேத வாக்கிற்கு எடுத்துக்காட்டு பகவான்.

10. ஸமர்த்தன் – எல்லா செயல்களிலும் திறமை படைத்தவர். பயனற்றது என்று தூக்கி எறியப்படும் கத்தரிக்காய் காம்பிலும் சுவையான சட்டினி செய்ய முடியும் என்று காட்டியவர். முள் மரக்கிளையை அழகான கைத்தடியாய் மாற்ற முடியும் என்று காட்டியும் அதைச் செய்து முடித்தபின், தான் வைத்துக் கொள்ளாது, ஆடுமேய்ப்பவனுக்குக் கொடுத்தவர். ஆயுர்வேத சிகிச்சை முறையையும் கல்லாமலேயே அறிந்தவர்.

11. ஏகப்ரிய தர்ஸனன் – பார்வையிலேயே தன் பேரன்பை வெளிப்படுத்துபவர். இதற்கு விளக்கமே தேவையில்லை. பகவானிடம் பல்லாண்டு காலம் வந்திருந்த 480க்கும் மேற்பட்ட பக்தர்களின் பதிவுகளில் காணப்படும் செய்தி. அவரது திருக்கண்ணோக்கத்தின் பேரன்பு மழையில் முக்குளித்ததைப் பற்றியே அமைந்துள்ளது.

12. ஆத்மவானி – தன்னில் தானே அடங்கியபின் தானே தானே தத்துவம் என்பதே பகவானின் உள்ளார்ந்த உபதேசம்.

13. ஜிதக்ரோதன் – சினத்தை முற்றிலும் கடந்தவர். பகவான் (வில்வ துளிர்களை பூஜைக்காகப் பறித்த சம்பூர்ணம்மாமீது தார்மீகமான கோபம் கொண்ட

ஒரே தருணம் தவிர) எப்போதும் பெருந்தவறு செய்தவர்கள்மீது கூட கோபம் காட்டாதவர். ஏனெனில் அவர் நாடி நரம்பில் எல்லாம் அன்பே ஓடியது. அதில் கோபத்திற்கு இடமில்லை.

14. த்யுதிமான் – ஒளிமிக்கவன். பகவானைப் பற்றியே அறியாமல் எதிர்பார்க்காமலேயே அவர் சந்நிதானத்தில் வந்து சேர்ந்தவர்கூட அவரைப் பார்த்த மாத்திரத்திலேயே அந்த மாபெரும் ஆன்மிக தேஜஸால் கவரப்பட்டு, அவர் பாதமே சரணம் என்று வந்து சேர்ந்தனர். முருகனார் முதல் பல்வேறு கவிஞர், எழுத்தாளர் வரை அனைவரும் அந்த ஒளிவட்டத்தில் ஒன்றினர்.

15. அநஸூயன் – இருமை அற்றவர். தன்னைத் தவிர வேறு ஒருவர் இருக்கிறார் என்ற ஒன்று இருந்தால்தானே, தன்னைவிட இன்னொருவர் சிறப்பாக உள்ளார் என்று நினைக்கும்போது பொறாமை எழும். பகவானோ, அனைத்துமே பரம்பொருளின் வெளிப்பாடு என்றுணர்ந்த மஹா ஞானி. அங்கே அசூசைக்கே இடமில்லை.

16. ஜாத ரோஷஸ – காரணமற்று சீண்டுபவர் மீது சீறுபவர். இது முன்பு கூறிய ஜிதக்ரோதன் என்பதற்கு மாறுபாடாகத் தெரியலாம். உண்மையாய் பகவான் கோபம் கொள்வதில்லை. சற்று கடிந்து கூறினால்தான் அடியார்க்கு நல்வழி காட்ட இயலும் என்பதால் சில சமயங்களில் கடிந்து கூறியிருக்கிறார். ஏன், ஒரு சமயம் தண்டபாணி ஸ்வாமியை, அடித்துக்கூட இருக்கிறார்! 'சினம் பயில்' என்று பாரதியார் கூறுவதுபோல், இது சினம் பயிலுதல், சினம் எழுதல் அல்ல.

17. ஸம்யுகே தேவா ச பீப்யதி – அவனைக் கண்டு போர்க் களத்தில் தேவர்கூட அஞ்சுவார்கள். இது ராமபிரானைப் பற்றி நாரதர் கூறுவதால் போர்க் களத்தில் ராமன் செய்த போர்க்கள வீரம் கூறப்படுகிறது. பகவான்

வெல்லும் போர்க்களம் ஏது? தன்னைச் சரணடைந்த அடியார்களை மீண்டும் லோகயேத வாழ்க்கைக்கு இழுக்கும் ஆசை, காமம் போன்ற தீய குணங்களை தன்னுடைய அருள் என்னும் அஸ்திரத்தால் அழிக்கிறார்.

நாரதர் விவரித்த ராமபிரானின் பண்புகளைப் போல, அத்தனை பண்பு நலன்களைப் பெற்றவர் நம் பகவான்.

தவம், ஸ்வாத்யாயம் என்னும் இரு காரணங்களையும் எங்ஙனம் பின்பற்றுவது என்பதைத் தன் வாழ்க்கை மூலமாகவே வாழ்ந்து காட்டிய உதாரண புருஷர் பகவான். அவர் பேரருள் நம்மை வழிநடத்துமாக!



## இனிவரும் திருநாட்கள் 2022


| *பூஜை/விழா/பண்டிகை* | *ஆங்கில தேதி* | |
|---|---|---|
| *பகவான் அருணையடைந்த தினம்* | 01-09-2022 | *வியாழன்* |
| *நவராத்திரி விழா தொடக்கம்* | 26-09-2022 | *திங்கள்* |
| *சரஸ்வதிபூஜை* | 04-10-2022 | *செவ்வாய்* |
| *விஜயதசமி* | 05-10-2022 | *புதன்* |
| *தீபாவளி* | 24-10-2022 | *திங்கள்* |
| *கார்த்திகை தீபோற்சவம் துவக்கம்* | 27-11-2022 | *ஞாயிறு* |
| *கார்த்திகை தீபம்* | 06-12-2022 | *செவ்வாய்* |

# சிவனுக்கும் உண்டோ சினம்?

வேதங்களில் நடுநாயகமாய் விளங்குவது யஜுர் வேதம். அதன் நடுவிலே ஆரத்தில் பதித்த மாணிக்கம் போலத் திகழ்வது 'ஸத ருத்ரியம்' எனப்படும் ஸ்ரீருத்ரப்ரஸ்னம். மந்திரங்கள் அனைத்துக்கும் இதுவே கருவூலம். முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளாய் ருத்ர தேவனின் இலக்கணங்களை எல்லாம் எழிலுற வர்ணித்துக் காட்டி, அவனை இவ்வாறு வணங்கு; வணங்குவையாயின் பெறற்கரிய பேற்றைப் பெறுவாய் என்று ஸ்ரீ ருத்ரத்தில் காணப்படும். முதலில் இதைப் படிப்போர்க்கு வியப்பைத் தருவதாய் அமைகிறது. வேதம் இப்படியும் கூறுமா? என்று அன்பர் வியக்கும்படி அமைந்திருக்கும் இச்சிறப்பு யாது? மேம்போக்காகப் பார்க்கும்போது இது ஒரு குறைபோல் கூடத் தோன்றலாம். அதேசமயம் இது மந்திர ராஜனாகிய ஸ்ரீ ருத்ரத்தின் சிறப்பு ஆகும். இது குறைவு அல்ல; நிறைவு!

இக்குறைவாகிய நிறைவு என்ன? பல நூறு முறைகள் இம்மந்திரத்தில் சிவபெருமானின் இந்தக் குறிப்பிட்ட அம்சத்துக்கு வணக்கம். அவரது இந்தத் தன்மைக்கு வணக்கம் 'நம:' என்று பலமுறை திரும்பத் திரும்பக் கூறப்படுகிறது. ஆண்டவனை பேரன்புடன் வணங்குவதே அடியார்தம் தொழில்.

வேலை வணங்குவதே நமக்கு வேலை என்பது தமிழ்ப்பாடல். இறைவன் 'நம:' 'நம:' என்று வழிபடுவோரை அவர் விரும்பும் பொருள்கள் அனைத்துமே 'நம:' 'நம:' என்று வழிபடும் என வேதமே கூறுகிறது.



*தம் நம இத்யுபாஸீத*
*நமயந்தே அஸ்மை காமா*

இவ்வாறு ஆண்டவனின் பற்பல மூர்த்தங்களையும் தன்மைகளையும் வணங்கி வழிபடக் கற்பிக்கும் வேத மாதா எல்லாவற்றிற்கும் முதலாக நூல் தொடக்கத்திலே ஒரு வணக்கத்தோடு ஆரம்பிக்கிறாள். (நம: வணக்கங்களுக்கும் முதலிடம் பெறுவதால் இவ்வாறு வணங்கப் பெறும் பொருள் மிகச் சிறப்பு வாய்ந்ததாக

இருக்க வேண்டும். இவ்வாறு சிறப்புப் பெறும் தன்மை எது என்றால், அது ருத்திர தேவனின் கடும் சினமே ஆகும்.)

நமஸ்தே ருத்ர மன்யவே

என்னும் இத் தோத்திரத்தின் பொருள் ருத்ர தேவனே! உன் கோபத்திற்கு என் முதல் வணக்கம் உரித்தாகுக என்பதே.

ஆண்டவனை அருட்கடல் என்று துதிகளில் பாராட்டுவது மரபு. அங்ஙனம் இருக்க, அவனைச் சினம் மிக்கவனாகக் காட்டி அவனுடைய மிகுந்த கோபத்துக்கு என் முதல் நமஸ்காரம் என்பது துதியா? ருத்திரன் அத்தகு கோபம் மிக்கவனா? அங்ஙனம் கோபம் கொண்டவனை எப்படி அன்புக் கடவுள் என்று தொழுவது என்ற கேள்விகள் எழலாம். இந்தக் கேள்விக்கு விடையாது?

சிவபிரான் கடவுளின் முத்தொழிலில் அழிக்கும் தொழிலையே முதன்மையாகக் கொண்டவன். அவன் சம்ஹார மூர்த்தி என்னும் நிலையில் சினம் என்னும் பண்பு அவனுக்குத் தலையாய தன்மையாய் அமைகிறது. தீயவரை அழிக்கச் சினம் என்னும் பண்பு தேவை. சாந்த மூர்த்தியான ராமனைக் குறிப்பிடும்போது சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற மனத்துக்கினியான் என திருப்பாவை வழுத்துகிறது. மேலும், தான் அழைத்தும் வராத சமுத்திர ராஜனை கடும் கோபம் கொண்டு, நீ உடனே இங்கு வராவிடில், இந்த மஹா சமுத்திரத்தையே என் பாணங்களால் வற்ற அடித்து விடுவேன் என்று சினத்துடன் கூறினான் ராமன். முன்னம், காலக்கெடு முடிந்தும்கூட வானரப் படைகளுடன் வராது காலந் தாழ்த்திய சுக்கிரீவனையே

நஞ்சம் அன்னவரை நலிந்தால் அது வஞ்சம் அன்று; மனு வழக்கு என்று அவனைத் தண்டிக்கக் கூறி



இலக்குவனை அனுப்புவதை நாம் கண்டுள்ளோம் அல்லவா?

அதேபோன்று 'சிவகவசம்' என்ற துதியில் தியான சுலோகம் கூறுகிறது.

வஜ்ரதம்ஷ்ட்ரம் த்ரிநயனம் காலகண்ட மரிந்தமம்!
ஸஹஸ்ரகர மத்யுக்ரம் வந்தே ஸம்புமுமாபதிம்!!

தெற்றுப் பற்களும், ஆயிரம் கைகளும் படைத்த அந்த ரௌத்ர வடிவினை 'அத்யுக்ரம்' என்பது பொருத்தமுடையதே. அழிக்கும் செயலே பணியாகக் கொண்ட தெய்வத்தின் சிறப்பியல்பு. அழிப்பதற்குத் துணைசெய்யும் கடும் சினமே என்பது பொருத்தமுடையதே.

எனினும் சில கேள்விகள் எழுகின்றன. சினம் அவனுடைய சிறப்புத் தன்மை ஆயினும் அதனை நாமும் வணங்க வேண்டுமா?

'எவடி க்ரோத ஏவடி ரஜோ குண ஸமுத்பவ' என்று ரஜோ குணத்தின் தன்மையாய்க் குறிப்பிடப்படும் சினத்தை நாம் ஏற்று வணங்க வேண்டுமா என்ற ஐயம் எழலாம். ஸ்ரீருத்ரம் முழுவதுமே ஆண்டவனே! மனிதர்

நிறைந்த இவ்வுலகை உமது கண்களால் இட்சிக்க வேண்டாம் என்றும், என் விஷயத்தில் உங்களது அம்பின் நுனி மழுங்கியதாய் இருக்கட்டும். உனது வில்லின் நாண் தளர்ந்ததாக இருக்கட்டும் என்றும் தங்களுடைய ஆயிரக்கணக்கான ஆயுதங்கள் எல்லாம் எம்மை நோக்கிக் குறி வைக்கப்படாமல் காப்பீராக! என்னும் பிரார்த்தனைகள் விரவிக் கிடக்கின்றன. அழிக்கும் தொழிலின் அதிபதியாகிய இறைவனை நோக்கி, தீய சக்திகளை எல்லாம் அழித்து உலகைக் காக்கும் கடவுளே! எம்மைக் காத்தருள்வீராக! என்று வேண்டுவது இயற்கையே. வேதமாதா தனிப் பெரும் கடவுளாம் சிவனைக் காட்டி, அன்பனே! சிவபிரானை வழிபடு. அவனே உன்னைக் காக்கும் அருள் வடிவமும் ஆவான் என்று நமக்குக் கற்றுக் கொடுக்கிறான்.

யாதே ருத்ர சிவா தனூரகோரா பாபகாஷினீ
தயா நஸ்தனுவ சாந்தமயா கிரிஷந்தா பிசாகஷீஹி

இறைவனின் சின வடிவமே உலகிற்குப் பேருதவி புரிகின்றது. அவனது அருள் வடிவமும் உலகிற்கு அடைக்கலமாக விளங்குகிறது என்னும் உண்மையினை நமக்கு விளக்குவதே வேதத்தின் நோக்கம். அவ்வாறு உணர்ந்திட நமது மண்ணுலக வாழ்வு நிலைபெற்றதாய் இருக்க வேண்டும்.

ஆண்டவனின் சினம் நம்மீது சாராமல், அவனது அருள் மழையே நம்மை நனைக்க வேண்டும் என உள்ளன்புடன் பிரார்த்திக்க வேதமாதா வழி காட்டுகிறாள்.

மனிதர் உள்ளத்தில் சினம் எனும் உணர்ச்சி உள்ளம் கவர்ந்து எழுந்து ஒலிக்கக் காரணம் வேறு. சிவ பிரானிடம் சினம் இலகக் காரணம் வேறு. இந்த அடிப்படை உண்மையை உணர வேண்டும். நாம் ஒரு பொருளை விரும்புகிறோம். அது கிடைப்பதில் இடையூறு வந்தால் சினம் பிறக்கிறது.

*“காமாத் குதஸ்சித் ப்ரதி வாதாத் க்ரோதோ அபிஜாயதே....”*

*என்று ஆதிசங்கரர் கூறுகிறார். அகங்காரத்தின் விளைவே ஆவலும் சினமும். இது நமது அனுபவத்தில் உண்மை என்று தோன்றுகிறது. தத்துவ நூல்களின் மூலம் உறுதிப்படுத்தப்படுகிறது.*

*ஆண்டவனுக்கு இத்தகைய அஹங்காரமும் இல்லை. அதில் பிறக்கும் ஆவலும் இல்லை. எனவே ஆவல் தடைப்பட்டு சினம் தோன்ற இடமில்லை. சுயநலத்தின் விளைவாக, தன் முனைப்பின் பயனாக பீறிட்டு எழும் சினம் என்பது ஆண்டவனிடத்தில் காணக் கிடைக்காதது. ஆயினும் உயிரினம் நல்வழிப்படுவதற்காக, அழிக்க வேண்டியவற்றை அழித்து, நல்லதான புதியது பிறக்க இடம் செய்வதற்காக சினம் ஆண்டவனுக்குத் தேவைப்படுகிறது. பாரதியாரும் தனது புதிய ஆத்திச் சூடியில் இதனை ‘சினம் பயில்’ எனச் சுட்டிக் காட்டுகிறார். தனது தெய்வீக சங்கல்பத்திற்குக் கருவியாக இச்சினம் எனும் தன்மையை சிவபிரான் வகுத்துக் கொள்கிறான். மானிடரிடம் தோன்றி, வாட்டும் சினத்திற்கும் இதற்கும் ஒரு தொடர்பும் இல்லை. ‘ஜன்ம கர்ம ச மே திவ்யம்’ என்று கண்ணன் தேர்த்தட்டில் கூறியதைப்போல இறைவனின் அவதாரமும், செயல்களும் மனிதனின் பிறப்பு செயல்களில் இருந்து அடிப்படையிலேயே மாறுபட்டவை. சிவபிரானின் சினம் உலகைக் காக்க வந்த சினம். அகந்தையின் மாசு எள்ளளவும் படியாத தூய தெய்வீக உணர்ச்சி அது.*

*அத்தகைய ருத்திர தேவனின் சினம் நம்மீது பாயாது விலகிச் செல்ல, நாம் தகுதி பெறுவோமாக. அப்போது உலகின் தீய சக்திகளை மட்டும் அழித்து துப்புரவு செயலில் பரமனின் சினம் ஈடுபடுமாக! தெய்வத்தன்மை வாய்ந்த ருத்திர தேவனின் சினத்துக்கு நமஸ்காரம் என நாம் துவங்கியது போலவே முடிப்போம்.*

# வேதாந்த விசாரம்

*அத்தியாயம் 4*

## ஆனந்த மயம்

**டாக்டர். ஏ.வி. ராஜகோபாலன்**

*ஆரவாரமான சென்னை நகரிலிருந்து ஐம்பது கிலோமீட்டர் தொலைவிலுள்ளது அந்த வேதாந்த குருவின் ஆஸ்ரமம். அவர், இந்திய மேற்கத்திய வேதாந்தங்களில் டாக்டர் பட்டம் பெற்றவர். தமிழ், சம்ஸ்கிருதம், ஆங்கிலம் போன்ற பன்மொழி வித்தகர். சிஷ்யர்கள் மத்திய வயது கிரஹஸ்தர்கள்; ஆன்மீக நாட்டமுடையவர்கள்.*

*முந்தைய அத்தியாயங்களில் ஞானி யார்? ஞானியின் சூழல் மற்றும் ஞான பாரம்பரியம் என்ற விசாரம் நடைபெற்றது.*

*சிஷ்யர்கள்: பலதரப்பட்ட ஞானிகளைப் பற்றிப் பார்த்தோம். இவர்கள் வழிபடும் இறைவன் எத்தகையவன்?*

*குரு: இது ஒரு சுவையான ஆராய்ச்சி. முதலில் வேதங்களை எடுத்துக் கொள்வோம். இவையே நம் ஞான பாரம்பரியத்தின் ஆரம்ப வித்துகள்.*

வேதங்கள் இறைவனை ஆனந்த வடிவாகக் கண்டுகளித்தன. இதில் ஒரு வியப்பான செய்தி இருக்கிறது. யாகங்கள் செய்யும்பொழுது வேதங்கள், சற்றே தூரத்தில் இருக்கும் ஒரு தெய்வத்தை நோக்கி

வேண்டுவது போன்ற ஒரு தொனி காணப்பட்டது. ஆனால், இந்தக் கர்ம மார்க்கத்திலிருந்து சற்றே விலகிப், பொதுவான ஆன்மிக நோக்கில் பார்க்கும்போது ஒரு மகிழ்ச்சி வடிவமான உறவே வெளிப்படுகிறது.

இந்த ஆனந்த வடிவான இறைவன் பரிசுத்தமான ஒரு பரம்பொருள்; நம்மை புனிதப்படுத்தும் ஒரு சக்தி; அழகும் ஆற்றலும் படைத்தது; அனைவருக்கும் அது நெருக்கமான ஒரு உறவு. இந்த ருக் வேத்தின் மந்திரம் அக்னி தேவனை நோக்கி அமைந்துள்ளது

அக்னிம் மந்த்ரம் புருப்ரியம்
ஸீரம் பாவகஸோசிஷம்
ஹ்ருத்ருபிர் மந்த்ரேபிர் ஈமஹே (ருக் 8.43.31)

இது ஒரு பக்கம்.

இதன் மறுபக்கம் அவனை வழிபடும் அடியார்கள்.

பழங்கால மதங்களில் பக்தர்கள் பெரும்பாலும் தங்களைப் பாவிகளாக, குற்றம் செய்தவர்களாகக் கருதி இறைவனிடம் மன்னிப்பு கேட்கும் கூட்டமாக காணப்பட்டார்கள். அவர்கள் பிரார்த்தனைகளில் பெரும்பாலும் 'நான் தவறு செய்துவிட்டேன்; என்னை மன்னியுங்கள்' என்ற கோணமே காணப்பட்டது. இங்கு நாம் காணும் வேதகாலத்து புருஷன் மிகவும் மகிழ்ச்சி கொண்டவனாக இருக்கின்றான். அவன் இதயத்தில் உற்சாகம் பீறிட்டுப் புறப்படுகிறது. மேற்கண்ட மந்திரம்,

'அந்த ஆநந்த வடிவிலான தெய்வத்தை மகிழ்ச்சி தளும்பும் இதயத்துடன் வழிபடுகிறேன்' (ருக் 8.43.31)

என்று கூறுகிறது. அதற்குக் காரணம் என்ன? வாழ்க்கையின் தேவையான வசதிகள் எல்லாம் கிடைத்த காரணமா, அல்லது இறைவனிடம் ஈடுபட்ட பரமானந்த லயிப்பா? இந்த ருக்கின் முந்திய வரிகளில் ஒரு விடையை ஊகிக்கலாம். 'உன் அருளால் நாங்கள் எல்லாத் துயரங்களையும் கடப்போமாக' (தரந்த:

*ஸ்யாம துர்கஹா 8.43.30). 'அவனருளாலே அவன் தாள் வணங்கி' என்ற மணிவாசகரின் ஆரம்பகால நிழலாக இதைப் பார்க்கலாம்.*

*எந்தக் காரணமாகவும் இருக்கலாம்.*

*சிஷ்யர்கள்: சுவாரசியமாக இருக்கிறது. ஆனால் எல்லா நேரங்களிலும் நாம் மகிழ்ச்சியாக இருப்பதில்லையே.*

*குரு: வாஸ்தவம். வேதம் இந்த உணர்வுகளை ஏற்கிறது. இந்த ருக்கின் அடுத்த வரிகளில் 'எங்கள் மனத்தளர்வுகளை அழித்து விடுங்கள்; இந்த ஒப்பற்ற வரத்தினை அளியுங்கள்.' என்ற பிரார்த்தனை காணப்படுகிறது. (ருக் 8.43.32 33). அந்த யதார்த்தமான மனித உள்ளம் நம்மை வசீகரிக்கிறது.*

*இத்தகைய உணர்வைப் பல இடங்களில் பார்க்க முடிகிறது. மகிழ்ச்சி நிரம்பிய ஒரு ஆரோக்கிய சிந்தனையை வேதத்தின் ஒரு பொது வடிவமாகப் பார்க்கலாம். சோமனை நோக்கிய ஒரு ருக்கில்,*

*'எங்களுக்கு ஆனந்தமயமான நல்ல மனதையும் அந்தராத்மாவையும் அறிவையும் தாருங்கள். உன் அருளால் பசும் புல்வெளியில் கால்நடைகளைப் போல, உன்னை வழிபடுவோர் உன் நட்பில் மகிழ்வுடன் வாழட்டும்.'*

*பத்ரம் நோ அபி வாதய மனோ தக்ஷமுத க்ரதும்*

*(ருக் 10.25.1.)*

*இதே கருத்து வேறு ஒரு ருக்கிலும் (10.20) அதேபோன்று சாம வேத்தின் 422வது கானமாகவும் வருகிறது. (இந்த மகிழ்ச்சியான மனம் என்னும் நிலைக்கு வேத கால மக்கள் அளித்த முக்கியத்துவத்தை நாம் உணரலாம்). இந்த ஆனந்த வடிவமான ஒரு ஆண்டான் - அடிமை என்ற உறவு பின்னர் வந்த மதுர*

பாவம் போன்ற பக்தி சித்தாந்தங்களுக்கு ஆரம்பமாக அமைந்திருக்கிறது.

இந்த இன்பத்தை இறைவன் தன் பக்தர்களுக்கும் அளிக்கிறான். அதுவே பேரின்பமாகிறது. அது நிலையானது. காரண காரியங்களுக்கு அப்பாற்பட்டது. இந்தக் கருணையை பெரியாழ்வார் வாக்கில் பார்க்கலாம்

இன்பம் அதனை உயர்த்தாய் (திவ்யப்பிரபந்தம்199)

இதை விட்டுவிட்டு சாதாரண இன்பம் தரும் ஸுவர்க்கம் மோக்ஷம் என்பதைப் பெற்று என்ன பயன்? துன்பம் தரும் நரகம் நம்மைச் சூழ்ந்தாலும் என்ன? என்ற கருத்தை முன்வைக்கிறார் ராமாநுஜ நூற்றந்தாதி படைத்த திருவரங்கத்தமுதனார் என்னும் வைணவப் பெருந்தகை.

இன்பந் தருபெரு வீடுவந் தெய்திலென்? எண்ணிறந்த
துன்பந் தருநிர யம்பல சூழிலென்? தொல்லுலகில்
மன்பல் லுயிர்கட் கிறையவன் மாயன் எனமொழிந்த
அன்பன் அனகன் இராமா னுசனென்னை ஆண்டனனே.
– திவ்யப்பிரபந்தம் 2820

இறைவனின் அன்புக்குப் பாத்திரமானபின் லௌகிக சுகங்கள் மட்டுமல்ல, பெறுவதற்கரிய மோக்ஷமும் பயம் தரும் நரகமும் கூட பக்தனைப் பாதிப்பதில்லை.

சிஷ்யர்கள்; இது உண்மையிலேயே சாத்தியமா? இந்தப் பிறவி என்பது நம் முன் பிறவிகளில் செய்த பாவங்களால் அமைந்தது; அதை நீக்கி வீடு என்னும் அந்தத் தளைகளற்ற நிலையை அடைவதே அன்பர்களின் நோக்கம் அல்லவா?

குரு: நல்ல கேள்வி. இவர்கள் உள்ளத்தில் ஆனந்தம் ததும்பி வழியும்போது அதைவிட ஒரு பெரிய சுகம் இருக்க முடியாது என்று அறிகிறார்கள். அதனால் சுவர்க-நரக எண்ணங்கள் உதிப்பதில்லை. இதற்கு ஒரு வேதாந்த விளக்கத்தை உங்களிடம் பகிர விரும்புகிறேன்.

வேதம் கண்ட ஆனந்தமயமான இறைவனையே வேறு விதமாக நமக்குக் காண்பிக்கிறது தைத்திரீய உபநிஷதம். இதில் வரும் ப்ருகுவல்லி என்ற பகுதி புகழ் பெற்றது. ஒரு கதையைப் போன்ற அமைப்பு இதற்கு மேலும் அழகு சேர்க்கிறது. ப்ருகு என்ற இளைஞன் தன் தந்தையாகிய வருணனைப் பார்த்துக் கேட்கிறான். 'ஐயனே எனக்கு பிரம்மத்தை உபதேசம் செய்யுங்கள்.' அவன் தந்தை அதற்கு நேரடியாக பதில் அளிப்பதில்லை. அதற்குப் பதிலாக ஒரு நிபந்தனையை விதிக்கிறார். 'நீ தவம் செய்து பிரம்மத்தை அறிவாயாக. தவமே பிரம்மம்' என்று சொல்லி அனுப்புகிறார்.

தந்தை சொல்லை சிறந்த மந்திரமாக ஏற்று அந்தச் சிறுவனும் தவம் செய்யச் செல்கிறான். முதலில் இக வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களை பிரம்மமாக உணருகிறான். அவையே அன்னமய கோசம் எனப்படும். மீண்டும் தவம் செய்யத் தூண்டுகிறார் அவருடைய தந்தை. அவனும் படிப்படியாக ப்ராணன், மனம், விஞ்ஞானம் என்று ஒவ்வொரு நிலையையும் தாண்டி இறுதியில் பிரம்மம் என்பது ஆனந்தமே என்பதை உணர்ந்தான்.

இதுவே இறைவன்; இதிலிருந்து உயிர்கள் தோன்றுகின்றன. தோன்றிய உயிர்கள் வளருகின்றன. இறுதியில் அதனிடமே புகல் அடைகின்றன. என்று உணர்கிறான் அச்சிறுவன்.

மிக உயர்ந்த தத்துவத்தை எளிதாகப் போதிக்கும் வரிகள்.

சிஷ்யர்கள்: வேதம் கர்ம மார்க்கம், உபநிஷதம் வேறுவகை. அது ஞானத்தைப் போதிப்பது என்றல்லவா நாம் நினைத்தோம்.

குரு: அப்படி இல்லை. வேதம் சொன்ன விளக்கத்திற்கு ஒரு வேதாந்தப் பின்னணியை

அழகாக அமைத்துத் தருகிறது மேற்கண்ட உபநிஷத வாக்கியங்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் திருநாவுக்கரசர் இயற்றிய ஒரு அழகிய தேவாரப் பாடல் நினைவுக்கு வருகிறது. எளிமையான பக்தரான அந்த உழவாரப்படை தாங்கிய உத்தமர் கீழ்க்கண்டவாறு சிவபெருமானைத் துதிக்கிறார்.

நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை அல்லோம்
ஏமாப்போம் பிணி அறியோம் பணிவோம் அல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை.

இறைவனைப் பணிந்து வணங்கிய அந்த எளிய அடியாரின் உள்ளத்திலே துணிவும் நம்பிக்கையும் மகிழ்ச்சியும் பீறிடுவதை நாம் நோக்குகிறோம்.

'நான் யாருக்கும் அடிமை இல்லை; எமனைக் கண்டு எமக்கு அச்சமில்லை; நரகம் சொர்க்கம் என்ற பிற எல்லைகளை நாம் கடந்து விட்டோம்; நோய் பிணி போன்ற துன்பங்கள் எங்களை வருத்தாது. யாரிடமும் நாம் அடிமைப்பட மாட்டோம். எங்களுக்கு இனி இன்பமே தவிர துன்பமில்லை.'

இந்த நிலை எப்படி அவருக்கு வந்தது? அவர் வரிகளிலேயே விடை கிடைக்கிறது.

கோமாற்கே நாமென்றும் மீளா அடிமை
கொய்மலர் சேவடியினிலேயே குறுகி னோமே.

'அந்த இறைவனுக்கே நாம் என்றென்றும் அடிமைப் பட்டோம். அவன் வழியிலேயே நாம் எம்முடைய ஆணவங்களை எல்லாம் இழந்து எம்மைச் சுருக்கி அந்தப் பரம்பொருளின் பேரருளில் கலந்தோம். அதனால் எங்களுக்கு எதைக் கண்டும் அச்சம் இல்லை; பிணி இல்லை; துன்பம் இல்லை என்னும் இந்த நாயன்மாரின் பக்தி தரும் கர்வத்தின் அக்கால எக்காளமாகவே மேற்கண்ட வேத வரிகளை நாம் பார்க்கிறோம்.

இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை என்னும் இந்த உணர்வு நாம் கண்ட வேத மந்திரங்களின் பிற்கால எதிரொலியே!

வேள்வி போன்ற கருமாக்களைச் செய்த பின்னர் உணவு அருந்தும் வேளை. மிகப் பெரிய நல்ல காரியத்தைச் செய்து முடித்துவிட்டோம் என்ற நிம்மதி. அதனால் சுரக்கும் ஆனந்தம். இந்த ஆனந்தத்தை பந்தியில் அமர்ந்திருக்கும் அனைவரும் சேர்ந்து வெளிப்படுத்துகின்றனர்.

பிரம்மமும், ஆனந்தமும், பிரம்மமேயாகிய ஆனந்தமும் என்னை அடையட்டும்.

இங்கு ஆனந்தம் என்ற உணர்வு லௌகிக எல்லைகளைக் கடந்து பிரம்ம வடிவாகி, பிரம்ம ரூபமாகிறது. இது சற்று ஆழமான சிந்திக்க வேண்டிய கருத்து. இது உணவுப் பந்தியில் அமர்ந்திருக்கும் அனைவரும் சேர்ந்து ஒரு கச்சேரிக்கு மங்களம் பாடுவது போல ஓதுவது, இந்தப் பல்வேறு சடங்குகளுடைய பயன் ஆனந்தம் என்னும் நிலைபாடே; வேறு உலகியல் பொருட்கள் அன்று என்னும் உயர்ந்த நிலை. இதுவே கர்ம மார்கத்தை ஞான மார்க்கத்துடன் இணைக்கிறது. பிரம்மஹத்தி தோஷத்தைப் போக்கவல்லதாக இந்த மந்திரம் ஓதப்படும். அது மட்டுமல்ல சிசுவை அழித்ததால் ஏற்படக்கூடிய சிசுஹத்தி தோஷத்தையும் நீக்கும் திறனுடையதாம் இது.

இந்த வரிகளை நோக்குவோம்.

ப்ரஹ்மமேதுமாம்| மதுமேதுமாம்|
ப்ரஹ்மமேவமதுமேதுமாம் ||

– மஹாநாரயணோபநிஷத் 38.1

வேதஸ்வரத்தில் ஓதப்படும் இந்த மந்திரம் கேட்பதற்கும் செவிக்கினியதாக இருக்கும் என்பது கூடுதல் இன்பம்!

*சிஷ்யர்கள்: சாப்பிடும் நேரத்தில் கூடவா தத்துவம்?*

*குரு: இல்லையே, இது, இவர்கள் தாங்கள் செய்த சடங்குகள், கற்ற நூல்கள் மற்ற எல்லாமே ஆனந்த வடிவம் என்றுதானே கூறுகிறார்கள். டிவியைப் பார்த்துக்கொண்டே சாப்பிடுவதைவிட இது ஆரோக்கியமான எண்ணம்தானே!*

இதே போன்ற ஒரு கருத்தை, பின்னர் ரிக்வேதம் பத்தாவது மண்டலத்தில் வேறு வடிவில் காண்போம். 'உயர்ந்த மலைகளிலிருந்து பிரவாகமாகச் செல்லும் ஆனந்தமயமான நதியைப் போன்று எங்களுடைய மந்திரங்கள் ஒலிக்கட்டும்' என்று பிரகஸ்பதியை நோக்கி வேறொரு சந்தர்ப்பத்தில் நாம் காண்கிறோம்.

கிரிப்ரஜோ நோர்மயோ மதந்தோ ருக் 10.68.1

உலகளவில், கடந்த சில நூற்றாண்டுகளாக, பக்தி சித்தாந்தங்கள் மக்களிடையே பரவலாக வெளிப்படுவதை நாம் பார்க்கிறோம். ஆனால் 5000 ஆண்டுகளுக்கு முன்பே இத்தகைய ஒரு பிரேம வடிவம் நம்முடைய வேதங்களிடையே காணப்படுவது நமக்குப் பெருமை சேர்க்கும் ஒரு கருத்து.

இதுவே இறைவடிவம். இதுவே உண்மை. இதை உணராதவரோடு சேர மாட்டேன் என்று கூரையில் நின்று கூவுகிறார் குலசேகரப் பெருமான்.

மெய்இல் வாழ்க்கையை மெய் எனக் கொள்ளும்
இவ் வையம் தன்னொடும் கூடுவது இல்லை யான்'
– திவ்யப்பிரபந்தம் 668

*சிஷ்யர்கள்: ஆனால் இந்த உண்மை வடிவம் நமக்கு எளிதில் புலனாவதில்லையே.*

*குரு: இது ஒரு பிரச்சினைதான். இதை ரமணரின் வாக்கில் பார்க்கலாம்*

*நகைக்கு இடம் இலை நின் நாடிய எனை*
*அருள் நகையிட்டுப் பார்நீ அருணாசலா*

*– அக்ஷரமணமாலை 53*

“எனக்கு உன் பிரம்ம வடிவம் புலனாவதில்லை. ஆனால் என்னைக் கண்டு நகைக்காதே; ஏளனம் செய்யாதே. உன் கருணை என்னும் அணிகலனை அணிந்து உன்னை அடைக்கலமாக அடைந்த என்னை அருளோடு நோக்கு” என்னும் பிரார்த்தனையை முன்வைக்கிறார்.

இது ஒரு ஆழமான செய்தியைச் சொல்கிறது. மற்றவரோ ஆண்டவனோ நம்மைக் கண்டு நகைப்பது ஒரு புறமிருக்கட்டும். நாமே நம்மைக் கண்டு ‘நான் ஏன் அப்படிச் செய்தேன்?’ என்று கடந்த காலத்தில் நடந்த சம்பவங்களைக் கண்டு வியக்கிறோம். ‘வெட்டியாக வாழ்ந்து விட்டோமே’ என்று துன்பப்படுகிறோம்.

இவ்வாறு பயனற்ற வாழ்வை நடத்துகிறோம். என்ன செய்வது என்று தெரியவில்லையே என்று வருந்தும் நமக்குத் தொண்டரடிப்பொடி ஆழ்வார் ஆண்டவனிடம் போய்க் கதறிஅழுவதுதான் ஒரே வழி என்று காட்டுவார். ‘என் உள்ளத்தில் தூய்மை இல்லை. என் நா நற்சொற்களைச் சொல்லுவதில்லை. எனக்கு நட்பு உறவு என்று யாரும் இல்லை. அனைவரிடமும் பகை. இவ்வுலக வாழ்வுக்கும் அவ்வுலக வாழ்வுக்கும் சிறிதும் லாயக்கு அற்றவன். நான் என் செய்வேன், வழி காட்டு அரங்கனே’ என்று கதறுகிறார்.

*மனத்திலோர் தூய்மை யில்லை வாயிலோ*
*ரிஞ்சொ லில்லை,*
*சினத்தினால் செற்றம் நோக்கித் தீவிளி விளிவன் வாளா,*
*புனத்துழாய் மாலை யானே. பொன்னிசூழ் திருவ ரங்கா,*
*எனக்கினிக் கதியென் சொல்லாய் என்னையா ளுடைய*
*கோவே.*

*– திவ்யப்பிரபந்தம் 901*

இவ்வுலக வாழ்வுக்கு உதவும் திறமையும் இல்லை; அவ்வுலகை அடைய வேண்டிய தவமும் இல்லை. இரண்டும் கெட்டான் நிலைமையில் இருக்கிறோம். வயதும் ஆகிவிட்டது. ஒருவரும் லட்சியம் செய்வதில்லை. என்னதான் செய்வது?

சரி, நம் குழந்தைப் பருவத்தை அலசிப் பார்ப்போம். அப்பொழுது நம் தேவைகள் என்ன? பசித்த வேளைக்கு உணவு, தாகத்துக்குத் தண்ணீர். உறங்க ஓர் இடம், துணைக்கு ஓர் அன்னை அவ்வளவுதான். வளர வளர நம் தேவைகள் அதிகரிக்கின்றன. வசதிகள் தேவைப்படுகின்றன. பிறர் நம்மை மதிக்க வேண்டும் என்னும் ஈகோ வளருகிறது. இவை அனைத்தும் நாம் நம்முடைய பிறவிகுணமான ஆனந்த வடிவத்தின்மேல் சாற்றிய உலகாயதப் போர்வைகள். இதைக் கொஞ்சம் கொஞ்சமாக விலக்கினால் அந்தக் குழந்தை உள்ளம் தெரிய ஆரம்பிக்கிறது. தேவைகளும் ஈகோவும் மறைகின்றன. பழைய ஆனந்த வடிவத்தை அடைகிறோம்.

இந்நிலை பெற்ற மகான் பட்டணத்தார் சொல்வதைப் பார்ப்போம்.

**உடைக் கோவணம் உண்டு; உறங்கப்**
**புறந்திண்ணையுண்டு; உணவிங்கு**
**அடைகாய் இலையுண்டு; அருந்தத் தண்ணீர் உண்டு;**
**அருந்துணைக்கே**
**விடையேரும் ஈசர் திரு நாமம் உண்டு; இந்த**
**மேதினியில்**
**வடகோடு உயர்ந்தென்ன தென்கோடு சாய்ந்தென்ன**
**வான்பிறைக்கே**

இவ்வளவுதான் நமக்குத் தேவை. எளிய உடை, உணவு, உறைவிடம். துணைக்கு இறை சிந்தனை.

ஏன் இந்த எளிமையை இழந்தோம்? எதற்காக மெனக்கெட்டு இத்தனை துன்பப் போர்வைகள்?

ரூசோ என்னும் ஃபிரெஞ்சு நாட்டு மேதை மிகச்சுருக்கமாக இதை விளக்குகிறான்.

*Man is born free and everywhere he is in chains.*

*– JeanJacques Rousseau*

எந்த பந்தமும் இல்லாத இன்ப வடிவாகப் பிறந்த மனிதன், தானே தன்னை ஆசாபாசங்களாகிய சங்கிலிகளால் பிணைத்துக் கொள்கிறான்.

ரூசோ இதை சொன்ன சூழலும் பின்புலமும் சற்று வேறுபட்டது. ஆனால் பொருள் ஒன்றே.

## யாவரும் நமது குருமூர்த்திகளே

*கேள்வி: எங்கே பார்த்தாலும், தீயவர்களும் தீமையுமே மலிந்துள்ள இவ்வுலகில் அமைதிக்கும் ஆனந்தத்திற்கும் இடமேது ?*

*பகவான்: அமைதியும் ஆனந்தமுமே நமது ஸ்வரூபம். ஸ்வரூப உணர்வினின்று நழுவுங்காலே, நல்லவர், தீயவர், நன்மை, தீமை என்னும் விகற்ப நினைவுகள் உதிக்கின்றன. மேலும் வியாவஹாரிகத்தில் துவைத திருஷ்டியிலும் யாவரும் நமது குருமூர்த்திகளே.*

*இன்னவிதமிருக்கக் கூடாது என்பதற்குத் தீயோரே நமது குருக்கள்.*

*நன்னெறியைக் கடைப்பிடிப்பதற்கு நல்லோரே உதாரணமாய் நின்றுதவும் தேசிகராவர்.*

*- ‘ஸ்ரீ பகவத் வசனாம்ருதம்’ நூலிலிருந்து*

# ‘ரமண ஞானபோதம்’: முருகனாரின் சரணாகதி தத்துவம்

## உரை: ரமணசுந்தரராஜன், ஸ்ரீரங்கம்

1. *அரண் ஆவது ஆருயிருக்கு ஆண்டவன்பால் ஆற்றும் சரணாகதி தருமம் தான்.*

*(ஸ்ரீரமண ஞான போதம் 1.613)*

தர்மங்களுக்கெல்லாம் மேலான தர்மம் சரணாகதி தர்மம்தான். ஒரு நாட்டை, கோட்டை காப்பாற்றுவது போல், உடலைக் கவசம் காப்பாற்றுவதுபோல், தன்னிடம் சரணாகதி செய்தவனை ரமண பகவான் காப்பாற்றுவார்.

2. *சரணாகதி சாதனையே அரணா*
*அடையக் கடவ கதி. (1.614)*

நம்மை வலிமையாகக் காக்க வல்ல வழி சரணாகதி சாதனை தான்.

3. *தஞ்சமடைந்தோர் சதாசிவ சாந்தானுபவ*
*நெஞ்சரா நீடு வாழ்வார். (1.615)*

பகவானிடம் தஞ்சம் அடைந்தவர்கள், எப்போதும் நன்மை அடைந்தவர்களாய், அமைதியின் ஆனந்த அனுபவம் உடையவர்களாய் நெடுநாள் வாழ்வார்கள்.

4. *தணக்க ஒணாதான் சரண் ஆகத் தன்பால்*
*இணக்கம் உற்றாரால் இறை. (1.616)*



பகவானே சரண் என்று, மனம் பொருந்தி பகவானைச் சரணடைந்தவர்களால் பகவானைப் பிரிந்து வாழ முடியாது. பகவானும், தான் வேறு, அவர்கள் வேறு என்று அவர்களைப் பிரித்துப் பார்க்க மாட்டார்.

5. தன்னை எனக்கு அளித்த தம்பிரான் சித்பதத்துக்கு
என்னை அளித்து இன்பம் உற்றேன். (3.1283)

இறைவன் ரமணன், தன்னையே எனக்கு அளித்தான். அவனது ஞானத் திருவடிகளுக்கு என்னை அளித்தேன். இன்பம் என்னில் பொருந்தியது.

6. வெள்ள அருள் வாழ்வு விளைத்த
அருள் சித்பரன் பால்
கொள்ளை கொடுத்தேன் என் மனம். (3.1284)

அருள் ஞானப் பரம்பொருளாம் பகவான், எனக்கு வெள்ளமாய் அருள் வாழ்வை விளைவித்தான். அந்த வெள்ள அருளில், பகவான் என் மனத்தைக் கொள்ளையடிக்கக் கொடுத்து விட்டேன்.

7. சத்குரு பாதத்தில் சரண்கண்டு கொண்டேனுக்கு
அற்குறுவாழ்வு உற்றது அகத்து. (3.1287)

ரமண பாதத்தில் சரணடைவதே சரியானது என்று கண்டுகொண்டேன். நிலைத்த வாழ்வு உள்ளத்தில் நிலைபெற்றது.

8. என்னைக் கொடுக்கமகிழ்ந்து ஏற்றுக்கொண்டு
ஈடாகத்
தன்னை எனக்குஅளித்த தம்பிரான் - அன்னையினும்
மிக்க பேரன்பு விளைநிலமாம் பொற்பதத்தில்
சொக்கலே போலும் சுகம். (3.1290)

என்னை பகவானுக்குக் கொடுத்தேன். மகிழ்வாக ஏற்றுக் கொண்டான். அதற்கு ஈடாகத் தன்னையே எனக்கு அளித்தான் தலைவன் ரமணன். அன்னையை விட மிகுந்த பேரன்பு காட்டும் அவன் பொற்பாதங்களில் சொக்கி இருக்கும் சுகம் ஒப்பில்லாதது.

9. ஆண்டவனுக்கு என்னை அறக்கொடுத்தேன்
என்அகத்தூடு
ஈண்டுவதாக் கண்டது பேரின்பநிலை - மூண்ட
அனர்த்தத்துக்கு ஏது அகந்தைப் பொய்த்தன்மை
எனத்தத்துவம் கண்டேன் யான். (3.1291)

ஆண்டவன் ரமணனுக்கு முழுமையாக என்னைக் கொடுத்தேன். பேரின்ப நிலையாய் என் அகம் நிறைந்தது. உடல் என்பதே பொருளற்ற ஒன்று. அதில், அகந்தை என்னும் பொய்த்தன்மை வேறு எப்படித் தோன்றும் என்கிற உண்மையை நான் அறிந்து கொண்டேன்.

10. அறியா அறிவே சொரூபமா ஆண்டாற்கு
அறிவற்று ஒழிந்தேன் அகத்தில் பிறிதின்
அறிவு அறியாமை அகன்றுஒழிய உண்மை
அறிவா விளங்கிற்று அருட் கேவலமே. (3.1304)

வேறு ஒன்றை அறியாததும் வேறு ஒன்றால் அறியப் படாததுமான கேவல அறிவே சொரூபமாக உள்ள இறைவன் என்னை ஆண்டான். அதனால் உலகிலுள்ள மற்ற பொருட்களின் அறிவோ அறியாமையோ எனக்குத் தேவைப்படாமல் வாழ்கிறேன். அதனால் அருட் கேவலமே உண்மை அறிவாக விளங்குகிறேன்.

11. தன் பெருமை தான்அறியாத் தன்மையனுக்கு
யான்என்னும்
என்பெருமை அல்லதுஇல்லை ஏற்றதோ நல்லதிறை
பன்னல்அரு மோனப்பரமசிவ மாட்சி பெற்றேன்
என்னைநான் அர்ப்பணமா ஏற்பித்த ஆற்றாலே.
(3.1306)

தன் பெருமையைத் தான் அறியாத தன்மையனான இறைவனுக்கு, யான் என்னும் என் பெருமையைக் கப்பமாக அளித்தேன். அதனால் வார்த்தைகளால் சொல்லமுடியாத மோனம் பெற்றேன். பரமசிவ மாட்சியோடு வாழ்கிறேன்.

*12. தன்னை அலாமல் சரண்எனக்குச் சற்றும் இல்லை*
*என்னவே சிக்கெனநன்கு ஈசனைநான் பற்றலுற்றேன்*
*பின்னமில் சத்போத அருட்பெற்றியால் உள்ளத்து*
*மன்ற ஒளிர்ந்தது தன்மாத்திரமாம் தன்மையே.*

*(3.1313)*

*இறைவனைத் தவிர சரணடையச் சற்றும் வேறு எதுவும் எனக்கு இல்லை. அதனால் இறைவனைச் சிக்கென நான் பற்றிக் கொண்டேன். பிளவுபடாத இறை அறிவின் அருட் பெருமையால், என் உள்ளத்தில் தன்மாத்திரமாம் (தானே தான் எனும்) தன்மை நன்றாக ஒளிர்ந்தது.*

*13. கண்ணே மணியே கதிரொளியே மெய்ஞ்ஞான*
*விண்ணே சொரூபவியன் பரமே - எண்ணே*
*எழுதா எழுத்தா இதயத்து ஒளிர்மெய்ப்*
*பழமுதலே நான்உன் பரம். (4.1423)*

*கண்ணே! ஒப்பிலா மணியே, கதிரொளியே, மெய்ஞானத்தின் உச்சமே, மிக்க சொரூபப் பரம்பொருளே, எண்ணமே, இதயத்தில் எழுத்தாக ஒளிரும் உண்மைப் பழ முதலே, நான் உன்னை அடைக்கலமாய் அடைந்தேன்.*

*14. மெய்யான ஞான விபூதிஅருள் சத்குருவாம்*
*செய்யா பரமசிவ சொரூப - பொய்யாப்*
*பரமார்த்த வாழ்வாம் பரம உபசாந்த*
*தருமஆத்த பாதம் சரண். (4.1424)*

*உண்மையான ஞானத் செல்வத்தை அருளும் சத்குருவே, சிறப்பு மிக்க பரமசிவ சொரூபனே, பொய்க்காத மேலான பேரமைதி தருபவனே, தருமமே வடிவான அன்பான பாதத்தில் சரணடைந்தேன்.*

*15. உன்அடியே அன்றிஉயிர்க்கு உண்மைசேர் பற்றுக்கோடு*
*உன்னிஉன்னி ஓரினு(ம்) மற்றுஓர் சிறிது(ம்) இல்லை என்றுஉன்*

*சன்னிதிசேர் ஆன்ம சமர்ப்பண சத்பக்தியோர்*
*என்னதுயான் அற்றுஒளிர் பேரின்பஇயல் காண்பதே.*

*(4.1430)*

பகவானே! உன் திருவடியைத் தவிர உயிர்க்கு உண்மையான பிடிப்பாக, எத்தனை தான் நினைத்து நினைத்து ஆராய்ந்தாலும் வேறு எதுவும் சிறிதும் இல்லை என்று உணர்ந்து உன்னிடம் ஆத்ம சமர்ப்பணம் செய்யும் மெய்ஞ்ஞான பக்தர்கள், 'நான்' 'எனது' என்ற எண்ணமற்று ஒளிர்வார்கள். பேரின்பத்தின் இயல்பை உணர்வார்கள்.

*16. பேதங்கள் எல்லாம் பிழைபட என்உள்ளுணர்வில்*
*போத சொரூப அனுபூதி புகட்டியவா*
*பாதமே சற்கதியாப் பற்றினேன் சற்றும்மனத்து*
*ஏதமில் பேரின்ப இயைபால் அடியேனே.*

*(4.1431)*

என் உள்ளுணர்வில் ஞான சொரூப அனுபூதி புகட்டியவனே! உன்னால் வேற்றுமை எண்ணங்கள் எல்லாம் பிழை என்று புரிந்து கொண்டேன். எனக்கு நல்ல கதி தருவது உன் திருவடிகள் என்று அறிந்து உன் திருவடிகளைப் பற்றினேன். மனத்தில் ஒரு சிறிதும் துன்பமே ஏற்படாதவாறு பேரின்பம் என்னோடு பொருந்தியது. நான் உன் அடியவன்.

*17. உன்பால் எனக்குமெய்அன்பு உள்ளதோ இல்லையோ*
*என்பால் உவந்துஅகம்புக்கு என்னைநீ*
*ஆட்கொண்டாய்*
*இன்பா இயைந்த இயற்சித் பரசொரூப*
*நம்பாஉன் சேவடியே நம்பலுற்றேன் கண்டாயே.*

*(4.1433)*

பகவானே! உன்னிடம் எனக்கு உண்மையான அன்பு ஏற்பட்டிருக்கிறதோ இல்லையோ தெரியவில்லை. ஆனால் உன்னுடைய உண்மையான அன்பை நான்

உணர்கிறேன். என் உள்ளம் புகுந்து என்னை நீ ஆட்கொண்டாய். இன்பமாக என்னோடு பொருந்திய இயல்பான, மேலான ஞான சொரூபனே! நம்பத் தகுந்தவனே! உன் திருவடிகளையே நம்பியுள்ளேன்.

*18. அன்னியச் சிந்தை அகன்று அறவே முற்ற முற்றத்*
*தன்னையே யாவர் சரணமாப் பற்றினார்*
*அன்னவர் தம் யோகக்ஷேமங்கள் அனைத்தும் நிதம்*
*தன்னவையே ஆகத் தலைப் பொறுப்பாத்*
*தாங்குவனே.*

*(8.23)*

வேறு எந்தச் சிந்தனையும் இல்லாமல், அறவே அகன்று போக, முழுமையாகத் தன்னையே சரணடைந்தவர்களது நல்வாழ்வைத் தன்னுடைய தலையாய பொறுப்பாகத் தினமும் தாங்குபவர் பகவான். இறுதியில் சாயுஜ்யமும் அளிப்பார்.

*19. ஆவலித்துச் சிந்தை அழுங்கல்ஒழிந்து*
*ஆண்டவன்தாட்கு*
*ஆவலில்வந்து அன்புகலந்து ஆட்படுங்கள் -*
*தேவரும்தாம்*
*உள்ளல் அருமோன ஒளிபெருகும் சீரமண*
*வள்ளலுக்கு ஆட்பட்டார் மனம்.*

*(8.737)*

பகவானிடம் ஆசையோடு வாருங்கள். அவரது அன்பை அனுபவியுங்கள். அவரது அன்புக் கலப்புக்கு ஆட்படுங்கள். சிந்தித்துச் சிந்தித்து அழுது புலம்பாதீர்கள். நம் வள்ளல் பகவானின் திருவடிகளைப் பற்றியவர்களுக்கு, தேவர்களும் எண்ணிப் பார்க்க முடியாத அரிய மோன ஒளி மனத்தில் பெருகும்.

*20. சுகம்ததும்ப நின்று துலங்குவாய் நெஞ்சே*
*முகந்ததுன்பம் எல்லாம் முசித்தே - அகந்தைஅற*
*மாண்டார் அகத்துஅசலமா நடம்செய் வேங்கடப்பேர்*
*ஆண்டான் அருளை அறி. (8.739)*

சுமந்த துன்பமெல்லாம் ஒழியும். சுகம் ததும்ப நின்று துலங்குவாய். அகந்தையை முழுமையாக அழித்தவர் நெஞ்சில் நிலைத்து ஆண்டவன் ரமணன் நடனம் செய்து அருள்வதை அறிவாய் நெஞ்சே!

21. எம்பிரான் ஆன இறைவன் குரு ரமணத்
தம்பிரான் தாளே சதமாக - நம்பினாற்கு
ஆரிருளாம் பாழைக் கடந்த பராத்பரமாம்
பேரொளிசேர் வாழ்க்கை பெரிது. (8.741)

என் தலைவன் இறை ரமணன் என் குருநாதன். என் நாயகன். அவன் தாளே எல்லாம் என்று நம்பினவர்களுக்கு, இருளாம் சூனியத்தைக் கடந்த மேலான பேரொளி சேரும். அவர்களின் வாழ்க்கை பெரிய வாழ்க்கையாய் நிறையும்.

22. குருஅருளுக்கு உன்னைக் கொடுத்தாயேல் புத்தித்
தெருமரல்போய் உண்மை திகழும் -
வெருவரல்போய்த்
தன்மெய்ப்பதத்தே தழைத்திடலாம் தட்கும் உயிர்க்
கன்மத் தளைதறிக்கும் காண். (8.821)

குரு அருளுக்கு உன்னைக் கொடுத்துவிடு. புத்திக் கலக்கம் போகும். உண்மை திகழும். அச்சம் போய்விடும். தடுக்கும் உயிரின் கர்மக் கட்டை வெட்டி விடுதலை வாழ்வளிக்கும். இறைவனின் பாதத்தில் தழைப்பாய்.

23. கடைக் குலவரேனும் தலைக்குலமா வாழ்வர்
அடைக்கலமாப் புக்கால் அரன்பால் - அடைக்கலமாப்
புக்கஉயிர் சித்சொரூபப் பூரணத்தே தன்இழப்பால்
பொக்கம்அறப் பொங்கும் பொலிந்து. (8.837)

சிவபெருமான் ரமணனிடம் அடைக்கலமாகப் புகுந்தவர்கள், உயர்குடியில் பிறந்தவர்களாய் வாழ்வார்கள். பகவானிடம் அடைக்கலம் புகுந்த உயிர்கள், ஞான சொரூபப் பூரணத்தில், 'நான்' என்னும் அகந்தை இழந்து, பொய்ம்மை இல்லாத பூரண வாழ்வு பொங்கிப் பொலியத் திகழும்.

24. பத்திக்கு இடம்கொடுத்த பாதமே தேர்சகல
வித்தை களுக்கும் விளைநிலமாம் - வித்தை
எதைத்தெரிய இச்சித் திடினும் கருத்தைப்
பதித்திடுக அந்தப் பதத்து. *(8.1073)*

*சகல வித்தைகளும் விளையும் நிலமான பகவானின் பாதத்தில் பக்தி செய்பவர்கள் எந்த வித்தையை விரும்பினாலும் அந்த வித்தையில் தேர்ச்சிபெற, பகவானின் பாதத்தைப் பற்றுங்கள்.*

25. அப்பனொடு பிள்ளை அபேதமாம் உண்மைஅறிவு
அற்பநடனாம் என் அகத்திலே - செப்பமுறச்
சேர்த்த மெய்யப்பனுக்குஎன் ஜீவியமே அர்ப்பணமாச்
சேர்த்தல் அன்றிச்செய்வது மற்றுஎன். *(8.1608)*

*வேற்றுமை இல்லாத உண்மை அறிவை என் உள்ளத்தில் நன்றாகச் சேர்த்த மெய்யப்பன் ரமணனுக்கு என் வாழ்வையே அர்ப்பணமாகச் செய்தேன். இன்னும் வேறு என்ன செய்வது? அவனில் வேறு ஆக நான் தனியாக இல்லை. எல்லாம் பகவானில் அடக்கம்.*

***நிறைவுரை:***

*இந்தச் சரணாகதிப் பாடல்களை பக்தியோடு படித்து, பகவானிடம் சரணாகதி அடைவோர், அடைய வேண்டியதை அடைவார்கள்.*

## கிரிவலம் வரும் பௌர்ணமி நாட்கள் - 2022

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஜூலை | 13 | புதன் | அதிகாலை 4.00 | 14 | வியாழன் | நள்ளிரவு 12.06 |
| ஆகஸ்ட் | 11 | வியாழன் | காலை 10.38 | 12 | வெள்ளி | காலை 7.05 |
| செப்டம்பர் | 09 | வெள்ளி | மாலை 6.10 | 10 | சனி | மாலை 3.28 |
| அக்டோபர் | 09 | ஞாயிறு | அதிகாலை 3.45 | 10 | திங்கள் | அதிகாலை 2.24 |
| நவம்பர் | 07 | திங்கள் | மாலை 4.15 | 08 | செவ்வாய் | மாலை 4.31 |
| டிசம்பர் | 07 | புதன் | காலை 8.01 | 08 | வியாழன் | காலை 09.37 |

# கருதியே திரிவீர் கருத்தினுள் ஒருகால்

**ஆகுரா**

*தஞ்சையில் மழை பொழிந்துகொண்டிருந்த ஒரு முன்னிரவு. பூண்டி கிராமத்தில் வடவாறு கரையில் ரமணருக்கு எளிமையான ஆலயம் எழுப்பிய – பூசலாரை நினைவூட்டும் – மாரியப்பன் குடை பிடித்து நடந்து கொண்டிருந்தார். அவரைப் பின்தொடர்ந்து வந்த ஓய்வுபெற்ற காவலர் ராஜேந்திரன் என்பவர் "அய்யா நான் தற்கொலை செய்துகொண்டு நாளை இறக்கப் போகிறேன்" என்று கவலையுடன் முன்பின் தெரியாத மாரியப்பனிடம் கூறினார்.*

*தனது வாழ்க்கையில் ஏதோ விரக்தியில் இருந்த அந்தப் புதிய மனிதரிடம் மாரியப்பன் ஏன் எது என்று கேட்காமல் "'ஓம் அருணாசல சிவா' என்று மூன்று முறை கூறிவிட்டு தூங்கி எழுங்கள் எல்லாம் சரியாகும்" என்று கூறிவிட்டு நடையைக் கட்டினார்.*

*வீடு சென்று அப்படியே ராஜேந்திரனும் அருணாசல மந்திரத்தை மூன்று முறை கூறிவிட்டு உறங்கினார். தூக்கத்தில் முழுவதும் அவருக்கு அருணாசல மந்திரம் ஒலித்துக்கொண்டே இருந்ததாம். விழித்த பின்னரும் அதன் தாக்கம் அவருக்கு உணரப்பட்டுள்ளது. இறக்க வேண்டும் என்ற விரக்தி மனதில் இருந்து அறவே அகன்றுவிட்டதாம். கடந்த 10 ஆண்டுகளாக*

*ராஜேந்திரன் பூண்டி ரமணாலயத்திற்கு தினந்தோறும் தஞ்சையிலிருந்து வந்து போகிறார்.*

*அடிக்கடி திருவண்ணாமலை கிரிவலம் செய்கிறார். இன்றும் பகவான் ரமணரே கதியாகக் கிடக்கிறார்.*

*"கிரி இது பரமாக் கருதிய என்போல்*
*கெட்டவர் எத்தனை கொல்லோ*
*விரிதுயரால் இப் பிழைப்பினில் விழைவு*
*விட்டுடல் விட்டிட விறகு*
*கருதியே திரிவீர் கருத்தினுள் ஒருகால்*
*கருதிடக் கொலாமலே கொல்லும்*
*அருமருந்து ஒன்று உண்டு அவனியில் அதுதான்*
*அருண மா திரம் என அறிவீர்"*

*– அருணாசல பதிகம்*

*அருணாசலத்தைப் பரம்பொருளாக நினைத்து என்னைப்போல் அகங்காரம் கெட்டு அழிந்து போனவர்கள் எத்தனைப் பேர்களோ!*

*பெருகிவரும் துன்பங்களினால் வாழ்க்கையில் வெறுப்புற்று, இந்த உடலை விட்டு இறப்பதற்கு ஒரு வழி கிடைக்குமா என்று எண்ணி அலைகின்றவர்களே! இறப்பதற்கு இதோ ஒரு உபாயம் உண்டு. கூறுகிறேன் கேளுங்கள். இந்த உடலை விடாமலேயே, இந்த தேகத்தை கொல்லாமலேயே, இந்தத் தேக அபிமானத்தைக் கொல்லக்கூடிய அருமையான மருந்து ஒன்று இருக்கிறது. அந்த அருள் மருந்துதான் அருணாசலம் என்னும் மாண்பு உடைய மலையாகும் என்பதை அறிவீர்களாக.*

*ஒருமுறை, ஒரு பாமர பக்தர் மற்ற பக்தர்கள் 'அக்ஷர மணமாலை' பாராயணம் செய்து கொண்டிருந்தபோது பகவானைப் பார்த்து, "அய்யா எனக்கு 108 கண்ணிகள் கூறும் அளவுக்கு அறிவு இல்லையே" என்று தன இயலாமைக்கு வருந்தினாராம். பகவான் அவரிடம்*

“கவலைப் படாதே நீ வெறும் ‘அருணாசல சிவா’” என்ற அடிகளைக் கூறினாலே போதுமானது என்றாராம்.

சுட்டறிவு கூடிய அன்பர்கள் அவர்களின் திறமை கொண்டு முழுவதும் பாட வேண்டியதாகிறது. பாமரன் எந்தத் திறமையும் அற்ற அறிவினன்.

அவனுக்கு ‘அருணாசல சிவா’ என்ற ஒரு சொல்லே பயன் அளிக்கப் போதுமானது. பாமரனுக்குக் கற்ற அறிவு ஒன்றும் இல்லை அதை அழித்து ஆன்மீகத்தில் முன்னேற. கற்ற அறிவே சில நேரங்களில் ஆன்மீக முன்னேற்றத்திற்குத் தடையாகி, கற்ற திறமை அனைத்தும் இழக்கப்பட்ட பின்னரே முன்னேற்றம் தெரிகிறது. ஆக ‘அருணாசலம்’ என்ற அந்த மந்திரம் இறப்பின் மதி மயக்கத்தில் இருந்த ராஜேந்திரனின் மன மாற்றத்திற்கு வித்திட்டு, அவரை ரமணரின் ஆன்மிகப் பாதையில் திருப்பிவிட்டது. அவர் இன்று அருணாசல கிரிவல அன்பராகிவிட்டார்.

“மரணபயம் மிக்க உள்ள அம்மக்கள் அரண் ஆக
மரண பவம் இல்லா மகேசன் – சரணமே
சார்வர் தம் சார்வொடு தாம் சாவுற்றார் சாவு எண்ணம்
சார்வரோ சாவதவர்.”

– உள்ளது நாற்பது மங்கல வெண்பா – 2

தீவிர விசார சீலர்களை அம்மக்கள் என்று இங்கு பகவான் கூறுகிறார். மரணபயம் எல்லோருக்கும் எப்போதாவது ஏற்படக்கூடியதே.

விசார மார்க்கத்தில் ஈடுபாடுள்ள மக்கள் மற்றவர்களைப்போல் அல்லாமல், மரண பயம் யாருக்கு என்று விசாரணை செய்வர்.

தங்கள் அகங்காரமே தடை என்று உணர்ந்து, மரண பவம் இல்லா பற்றுக்கள் அற்ற மகேசனிடம், தன் அகங்காரத்தை சரணடைவிப்பர்.



அதாவது மகேசனின் தன்மை அடையப்பெறுவர் (தன் மயம் ஆதல்). அகங்காரம் அழிந்தால் மீண்டும் உடல் எடுக்கும் தன்மை நீங்கப் பெறுவர்.

ஜனன மரண சுழற்சியில் இருந்து விடுபடுவர். பின்னர் அவர்களுக்கு மரணபயம் மீண்டும் எப்படி எழும்?

உயிரின் அகந்தை இவ்வுடல் விட்டாலும் வேறு ஒரு உடல் எடுத்துக்கொள்ளும். அகந்தை உடல் இன்றி இருக்காது. அகந்தை இன்றேல் உடலும் இல்லை.

பிறப்பும் இறப்பும் இல்லை. நாம் உடல் எடுத்த நோக்கமே அகந்தை அழிந்து உண்மை இன்பம் துய்க்க. ஒருவருக்கு வரும் துன்பங்கள் அவரின் தலைவிதி என்பது சரி அல்ல. பிறவி எடுத்த அனைவருக்கும் தலைவிதி எனப்படுவது மரணமே. மனித வாழ்வில்

நமக்கு இறைவனால் அளிக்கப்படும் துன்பங்கள் அனைத்தும் "யாருக்கு இது?", என தீவிர விசாரணை செய்வதற்கு. துன்பங்கள் நாம் உய்ய பயன்படுத்தப்பட வேண்டிய படிக்கற்கள்.

துன்பங்கள் அனைத்தும் மரணம் என்னும் நம் தலைவிதியை வெல்வதற்காக அளிக்கப்பட்ட அருட்கொடைகள்.

துன்பம் "யாருக்கு?" என்று விசாரித்தால், அது "எனக்கு" என்ற விடை கிடைத்தால், இந்த "நான்" யார் என்று வினா மனத்தில் எழும்.

"நான்" என்னும் தூய்மையான ஆத்மாவினின்று அகந்தை சேர்ந்து, அகந்தையோடு கூடிய "நான்" எழுகின்றது. அகந்தை ஒரு மாயை.

உண்மையானது அல்ல. ஆனால் இந்த பொய்த் தோற்றமான அகந்தையே அனைத்துத் துன்பங்களுக்கும் மூல காரணம்.

அகந்தை ஒழிந்தால், அகந்தை தன் மூலத்தில் ஒடுங்கினால் நாம் "தூய நான்" ஆக, ஆத்மாவாக விளங்குவோம்.

உயிர் அகந்தை போனால் ஆன்மா விளங்கும்.

ஆன்மாவில் இருந்து எழுந்து உண்மைபோல் ஒளிர்விக்கப் படுகின்ற இந்த அகந்தையினின்றே மனம் எழுகின்றது.

மனத்தில் எழுவதே எண்ணங்கள்.

இந்த அகந்தை என்பது என்ன?

1. நம்மை நாம் இன்னார் என்று, இந்த உடல், ஆண் பெண், உயர்ந்தவன் என்பதெல்லாமாக பொய்யாக உருவகப் படுத்திக்கொள்ளல், அபிமானித்தல் ஆகும்.

2. "எனது" என்னும் பொய்யான எண்ணம்.

*3. "நான் செய்கிறேன்" என்னும் பொய்யான எண்ணம்.*

*நமக்கு வரும் துன்பங்கள் அனைத்திற்கும் மேலே கூறப்பட்ட அகந்தையின் அங்கங்களில் ஏதாவது ஒன்றோ அல்லது மூன்றுமோ காரணமாக அமையும். இந்த அகந்தை அழித்தல் ஒன்றே நாம் செய்ய வேண்டிய ஒரே செயல். இந்த முயற்சியும் தோல்வியில் தான் முடியும்.*

*ஆனால் இம் முயற்சியின்போது இறைவனின் கருணை வேலைசெய்து இதில் வெற்றியைக் கொடுக்கும். முயற்சியின் முடிவில் அது உணரப்படும்.*

*பூரண சரணாகதி என்பது அப்பொழுதே நடப்பாகும். இறைக் கருணை வேலை செய்து தன்மயம் செழிக்கும். அருணாசல தத்துவம் இதுவே.*

*ஒருவரது சுய முயற்சியாலோ மற்றும் புத்திக் கூர்மையாலோ ஆன்மா விளங்குவது என்பது முடியாது. பூரண சரணாகதி ஒன்றே ஆன்மா விளங்க வழி.*

*இந்த அகந்தை ஒடுங்குதலே, இந்த அகந்தை நம்மை விட்டுக் கழறுவதே, உள்ளதை உணர்தல் ஆகும். அருணாசல மலை மா மருந்து என்பதும் இதுவே.*

**ரமணோதய அன்பர்களுக்கு**
**ஓர் அன்பான வேண்டுகோள்**

ரமணோதய சந்தா புதுப்பிக்காதவர்கள் தயவுசெய்து தங்களது சந்தாவை புதுப்பிக்கவோ அல்லது ஆயுள் சந்தாவாகச் செலுத்தவோ செய்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

# தத்துவக் கொடுமுடியாம் தாயுமானவர்

**ராம் மோஹன்**

அகந்தை என்ற மனநிலை மனிதனின் துன்பங்களுக்கெல்லாம் அடிப்படைக் காரணம் என்பதைச் சமய, தத்துவ நூல்களில் எல்லாம் காண்கிறோம். தனக்கு அகந்தை என்ற கர்வம், இறுமாப்பு இருப்பதையே மனிதன் பெரும்பாலும் உணர்வதில்லை. நம் நண்பரிடம் வாய்விட்டுப் பேசுகையில் ஒருவர், "இந்த சமூகத்தில் என்னைவிடப் படித்தவர்கள், சாமர்த்தியசாலிகள், பணக்காரர்கள் நிறையப்பேர் இருக்கலாம்; ஆனால் என்னைப்போல் கர்வமில்லாத, அடக்க சுபாவமுள்ளவர்கள் யாரும் இருக்க முடியாது. இது நிச்சயம்!" என்று சொன்னாராம்.

இரண்டு பெண்கள், பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஒருத்தி, "மிகவும் அழகான பெண்ணைப் பார்த்தால் நீ என்ன செய்வாய்?" என்று கேட்டதற்கு மற்றவள், "சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருப்பேன். பிறகு முகம்பார்க்கும் கண்ணாடியை வைத்துவிடுவேன்!" என்று பதில் சொன்னாளாம்.

கோடம்பாக்கத்திலிருந்து தில்லி சென்றிருந்த ஒரு இளம் நடிகர் நன்றாகக் குடித்துவிட்டு ஓட்டலில் நிலைக்கண்ணாடியில் தன் உருவம் தெரிவதைப் பார்த்தார். "அட! தில்லியில்கூட என் போட்டோப் படத்தை வைத்திருக்கிறார்களே!" என்று வியந்து கொண்டாராம்.

இப்படி அகந்தை என்னும் மனநிலை நம்மிடையே விரிவாகப் பரந்து காணப்படுகிறது. இதையே, தமிழில் மெய்ப்பொருள் பற்றிப் புகழ்பெற்ற பாடல்களை இயற்றிய தாயுமானவர் பற்பல இடங்களில் சுட்டிக்காட்டி இருக்கிறார். அவற்றில் சிலவற்றை மட்டுமே இங்கே காட்டி மேலே செல்வோமாக.

'சின்மயானந்தகுரு' என்ற பாடலில்,

**அவ்வியம் இருக்கநான் என்கின்ற ஆணவம்**
**அடைந்திட்டு இருக்க லோபம்**
**அருளின்மை கூடக் கலந்து உள்ளிருக்க...**

நான் ஆன்மிக முன்னேற்றம் அடைய முடியுமா என்று கேட்கிறார் புலவர் பெருந்தகை (அவ்வியம் - பொறாமை)

அதே பாடலில் வேறொரிடத்தில் தன் மனத்தை இருள்சூழ்ந்த ஆணவக் கருவறை என்று இகழ்ச்சியாகக் குறிப்பிட்டுப் பேசுவார்.

தன் மௌன குருவின் ஆசியால் பரமனின் அருளைப் பூரணமாகப் பெறும் பேற்றினை 'மௌனகுரு வணக்கம்' என்ற படைப்பிலே வருணிப்பாராகி,

**ஆசை நிகளத்தினை நிர்த்தூளி படஉதறி**
**ஆங்கார முளையை எற்றி**
**அத்துவித மதம்ஆகி ......**
**.................. என்னை ஒருஞான**
**மத்தகசம் என வளர்த்தாய். (1)**

என்று மனமுருகிப் பாடுவார். ஆசையும் அகங்காரமும்தான் ஆன்மிக நாட்டம் உடையவனுக்கு முதற்படியாக நீக்கத்தக்க இடையூறுகள் என்பதை இதில் தெளிவாகக் காட்டிவிட்டார்.

மனிதன் எத்தனை முயற்சி செய்தாலும் அகந்தை என்ற கொடுமையான தீக்குணம் நீங்குவதில்லை என்பதை 'ஆனந்தமான பரம்' என்ற பாடலில்,

*எத்தனை விதங்கள் தான் கற்கினும் கேட்கினும்*
*என் இதயம் ஒடுங்கவில்லை யான் எனும்*
*அகந்தைதான் எள்ளளவு மாறவில்லை (9)*

என்று பெரிதும் வருந்திக் கூறுவார்.

இதேபோல், 'ஆகாரபுவனம் - சிதம்பர ரகசியம்' என்ற படைபினில்,

*நான் என்னும் ஓர் அகந்தை எவர்க்கும் வந்து*
*நலிந்தவுடன் ஜகமாயை நானா ஆகித்*
*தான்வந்து தொடரும்; இத்தால் வளரும் துன்பச்*
*சாகரத்தின் பெருமை எவர் சாற்ற வல்லார்? (15)*

(நானா ஆகி= பலவாகி)

என்று இந்த அகந்தையின் வலிமையை வருணிப்பார். 'பன்மாலை' என்ற பாடலில்,

*நான்நான் இங்கு எனும் அகந்தை எனக்கு ஏன்*
*வைத்தாய்? (5)*

என்று படைப்போனைச் சினத்துடன் கேட்பார், தாயுமானவர். பெரும் துயருடன் 'எந்நாள் கண்ணி'யில்

*ஆணவத்தோடு அத்துவிதம் ஆனபடி மெய்ஞானத்*
*தாவினோடு அத்துவிதம் சாரும்நாள் எந்நாளோ? (27)*

என்று ஆண்டவனை வினவுவார். இங்கு முதல்வரியில் உள்ள அத்வைதம் என்ற சொல் இணைபிரியாத சேர்க்கை என்ற பொருளில், வெறுப்பின் குறியாகப் பயன்படுத்தப் பட்டது.

அகந்தை, செருக்கு என்ற தீக்குணங்கள் வந்து மனத்தைக் கவ்விக்கொண்டால், அந்த மனத்தில் உலகின் (பேதங்கள் நிறைந்த) மாயைத் தோற்றம் மாறாமல் இருந்து வரும் என்ற கருத்தைக் காட்டுவாராகி, 'உடல் பொய்யுறவு' என்ற படைப்பினிலே

*தான்ஆன தன்மைவந்து தாக்கினால் அவ்விடத்தே*
*வானாதி மாயை வழங்காதோ? (59)*



என்று கேட்பார். பேதத்தன்மையே வடிவான 'வானாதி மாயை' வந்து படிவதற்கே அடிப்படைக் காரணம் அகங்காரம் என்பதாகும் என்ற தலைமையான தத்துவத்தை இதில் தெளியக் காட்டிவிட்டார் தத்துவாசிரியராகிய தாயுமானார்.

'மௌனகுரு வணக்கம்' என்ற பொருளாழம் மிக்க பாடலில் முதல்பாட்டின் ஒரு பகுதியை முன்பே காட்டினோம். அதன் 9-ஆம் பாட்டு அகங்காரத்தின் இயல்பை முழுமையாக அலசிக் காட்டிப் படிப்போர் உள்ளத்தில் ஆழம் பதிய வைத்துவிடுகிறது. அதை முழுமையாக இங்கே சுவைத்துப்பின் அதன் அடிப்படைக் கருத்தைப் பல நாட்கள் சிந்தித்துப் பார்த்தல் நன்று.

*ஆங்காரம் ஆனகுல வேடவெம் பேய்பாழ்த்த*
*ஆணவத் தினும்வலிதுகாண்*
*அறிவினை மயக்கிடும் நடுஅறிய ஒட்டாது*
*யாதுஒன்று தொடினும் அதுவாய்த்*
*தாங்காது மொழிபேசும் அரிகரப் பிரமாதி*
*தம்மொடு சமானம்என்னும்*
*தடையற்ற தேரில்அம் சுருவாணி போலவே*
*தன்னில்அசை யாதுநிற்கும்*
*ஈங்குஆர் எனக்குநிகர் என்னப்ர தாபித்து*
*இராவணா காரமாகி*
*இதயவெளி எங்கணும் தன்னரசு நாடுசெய்து*
*இருக்கும்இத னொடுஎந்நேரமும்*
*வாங்காநி லாஅடிமை போராட முடியுமோ*
*மௌனோப தேசகுருவே*
*மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்*
*மரபில்வரு மௌன குருவே. (9)*

*வாங்கா நிலா=இதனைத் தவிர்த்து நீக்கி விடாமல்*

*அம் சுருவணி என்பது நல்ல முறையில் உருவாக்கப்பட்ட அச்சாணி, axis of a wheel.*

*இப்பாடலில் அகந்தை எத்தனை வரிகளில் நம் ஆன்மிக முன்னேற்றத்தைக் குலைக்கின்றது என்பதைத் தெளிவாக எளிய தமிழில் தாயுமானார் காட்டி விடுகின்றார். அது அறிவினை மயக்கி விடுவதன் பயன், தானே சிவன், திருமால், பிரம்மா இவர்களுக்குச் சமமானவன் என்று அவன் நினைக்கத் தொடங்குவதே!*

*அகங்காரத்தில் இராவணனுக்கு நிகர் யாருமில்லை என்பதே நம் மரபில் வந்த முடிவான கருத்து. வால்மீகியும் கம்பனும் இராவணனின் அகந்தையைச் சிறப்பாக வருணிப்பார்கள். அகந்தை முழு வடிவான அவனைத் தாயுமானார் குறித்தது சிறந்த இலக்கிய உத்தி. அகந்தை மிகுதியாக உடையவர் அழிவது உறுதி என்பதை இது தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.*

இத்தகைய செருக்கு, நான் என்ற வலிமிகுந்த தீர்மானம் மனத்தில் ஆட்சி செய்யத் தொடங்கி விட்டால் இதை நம் போன்றோர் எதிர்த்துப் போராடி வென்றுவிட முடியுமா? பாட்டின் கடைசி வரிகள் இந்தப் பரிதாப நிலையை நன்றாக எடுத்துக் காட்டுவன.

திருச்சிராப்பள்ளி நகரில் திவானாகப் பணியாற்றிய தாயுமானார் தம் வேலையைத் துறந்தபின் அதே நகரில் துறவியாகப் பிச்சை எடுத்து வாழ்ந்தார். செருக்கு, மமதை என்பவை அவரிடம் எள்ளளவேனும் இருந்திருக்குமாயின், அரச வாழ்வு வாழ்ந்து வந்த அதே ஊரில் ஆண்டியாகத் திரியும் நிலையைத் தாமாகவே விரும்பி ஏற்றுக்கொள்ள இயலுமா? அடக்கத்தின் உருவாக வாழ்ந்த இவ்வடிகள், மமதை அகங்காரம் பற்றிக் கூறிய உயர்ந்த தத்துவங்கள் மனதில் வைத்துப் போற்றிப் பின்பற்றத் தக்கனவன்றோ?

இதற்கு அடுத்தாற்போல் அகந்தை குறித்துப் பின் கவிஞர்கள் கூறியுள்ள சில அழகிய வாகசங்களை நுகர்ந்து இன்புறுவோம். சமயத்தை அழகிய பாடல்களாக வளர்த்துதவிய குமரகுருபரர் 'நீதிநெறி விளக்கம்' என்ற நீதிநூல் ஒன்றினையும் இயற்றித் தந்திருக்கிறார். அதில் தற்பெருமை பேசுவோரின் 'நல் வினையும் தீதே' என்று அழகிய இலக்கிய வழியே காட்டுவார். பாடல்:

விலக்கிய ஓம்பி விதித்தனவே செய்யும்
நலத்தகையார் நல்வினையும் தீதே - புலப்பகையை
வென்றனம் நல்லொழுக்கில் நின்றேம் பிறவென்று
தம்பாடு தம்மிற் கொளின் (18)

[செயல்கள் எல்லாம் பெரியோர் விதித்தபடியே இருப்பினும் தம் சிறப்பு, பெருமையை எல்லாம் தம் உள்ளத்திலே நினைத்து நினைத்துத் தம்மைப் பெரியோராக நினைத்துக் கொள்வது தீயதே ஆகும்.]

தம் பெருமையைச் சிறப்பித்துப் பிறரிடம் பேசுவது தவறு என்று நாம் படிக்கின்றோம். அந்தச் சிறப்பு, உயர்வு இவற்றை நமக்குள்ளேயே நினைத்துப் பெருமைப் பட்டுக் கொள்வதும் தவறுதான் என்று சிறப்பாகக் காட்டுவார் குருபரர்.

குமரகுருபரர் இயற்றிய கந்தர் கலிவெண்பாவில் குமரக்கடவுளின் அருள் நமது மனத்தை மறைக்கும் 'ஆணவம் ஆன படலம் கிழித்து', 'யான் எனது என்று கற்ற இடமே திருவடியாக'க் காட்டிப் பேருதவி புரியும் கன்பர்க்கே என்று பாடுவார். செருக்கு என்ற தீயகுணத்தைக் குமரன் எத்துணை அளவுக்கு வெறுக்கிறான் என்பதைக் காட்ட, அகந்தை வரப்பெற்ற பிரமனை முருகன் எப்படித் தண்டித்தார் என்பதைப் பின்வரும் வரிகள் காட்டுவன:

படைப்போன் அகந்தை உரைப்ப
மறை ஆதி எழுத்தென்று உகந்த
பிரணவத்தின் உண்மை புகன்றிலையால்
சிருஷ்டித் தொழில் அதனைச் செய்வது எங்ஙன் என்று
முனம் குட்டிச் சிறை இருத்தும் கோமானே! (90-92)

ஓரரசன் மற்றோர் அரசனிடம் ஒருவரைத் தூதனாக அனுப்பினால் அவருக்கு அடக்கம் பெருமளவு இருக்கவேண்டும். செருக்கின்றி அடக்கத்துடன் அத்தூதன் தன் பணியை நிறைவேற்றுவதால் நாடுகள் பெரும் பயனைப் பெறுகின்றன. மாருதி தூது சென்று இலட்சிய முறையில் தம் பணியைச் செய்து முடித்து உலகுக்கே பெருத்த நன்மையை விளைவித்த சிறப்பைக் கண்டு வியந்த இராமபிரான், "எனக்கு இத்தகைய பேறு கிடைக்கவில்லையே! அடுத்த பிறப்பிலேனும் நான் தூது செல்லும் பேறு பெற வேண்டும்!" என்று மனம் நெகிழ்ந்து வேண்டினாராம்.

அதன்படியே தமது அடுத்த பிறப்பாகிய கிருஷ்ணாவதாரத்தில் பாண்டவர்க்கும் கௌரவர்க்கும்

இடையே தூதுவராகச் சென்றார். சென்ற இடத்தில் விதுரன் வீட்டுக்குப் போய் உணவு கொண்டார், துரியோதனன் அளிக்கவிருந்த விருந்தினை ஏற்க மனமில்லாது விதுரரின் எளிய உபசரிப்பை ஏற்று மகிழ்ந்தார் என்பதும் இங்கு கவனிக்கத் தக்கது. ஒரு தூதருக்கு அறிவுத்தெளிவு, பேச்சுத்திறமை என்ற சிறப்புக்களுடன் அடக்கமும் அமைந்திருக்க வேண்டும் என்பது தெளிவு.

திரு. முகவைக்கண்ண முருகனார் குறட்பாவினத்தில் பாடிய சில பாடல்களை இங்கே கூறி இப்பகுதியை நிறைவேற்றுவோம்.

*சுட்ட வொணாத சொரூப அருட் பார்வையால்*
*கெட்டது அகங்காரக் கிறி (319)*
*வெளியா மலர விரிந்த வுளத்தால்*
*இளிசேர் அகந்தை இலேன் (320)*
*உண்மை உணர்வால் ஒழிந்தது அனாதிமலத்*
*திண்மைசேர் வஞ்சச் செருக்கு. (323)*

இவை ஸ்ரீரமண ஞானபோதம், 5-ஆம் பாகம், அநுபவ விளக்கம் மூன்றாம் பிரிவிலிருந்து எடுக்கப் பெற்றவை.

செருக்கு, அகந்தை என்பது நம் வாழ்க்கையில் எந்த அளவுக்குத் தீங்கு விளைக்க வல்லது என்பதைச் சரித்திரத்தின் வழியாகவும் நம் அனுபவத்தாலும் நன்கு உணர்ந்து கொள்ளலாம். இரணியன், இராவணன் போன்றோர் பல திறமைகளைப் பெற்றவராகத்தான் இருந்தனர் என்பது உண்மை. ஆனால் இக் காரணத்தாலேயே செருக்கு, அகந்தை அளவுகடந்து சென்று அவர்களை மயக்கி அறிவினைக் குழப்பி முடிவில் அவர்களை அழித்து விட்டது என்பதை நூல்களில் படிக்கிறோம்.

இவர்கள் இருவரிலும் இரணியன் செய்த சாதனைகளும் அவற்றின் விளைவாக அவன்

*இப்பிரபஞ்சமே மனித உலகத்தில் மட்டுமன்றித் தேவர்கள் உலகிலும் பெற்ற பெருமையும் கம்பராமாயணத்தில் யுத்த காண்டம் - இரயிண வதைப் படலத்தில் முதல் 18 பாடல்களில் சிறப்பாகக் கூறப்பட்டன. அவனுடைய அகங்காரத்தின் சிகரத்திலே அவன் நிற்கையில் திருமாலைக் குறித்த மந்திரமாகிய "ஓம் நமோ நாராயணாய" என்பதற்குப் பதிலாகப் பள்ளிகளில் 'ஓம் நமோ ஹிரண்யாய' என்பதையே பயிற்றுவிக்கும்படி ஆசிரியர்களுக்கு உத்தரவிட்டான்!*

*இவனது சபையில் இவன் கருத்துக்களுக்கு மாறாகச் சொல்லி மெய்யான நல்லுரைகளை எடுத்துக்கூற யாருக்கும் மனத்திட்பம் இல்லை. இரணியனின் மகனாகிய பிரகலாதன் ஒருவன்தான் தைரியத்தோடு திருமாலின் மந்திரத்தையே ஓதினான், பிடிவாதமாக. இதன் விளைவாக அவன் தந்தையின் கடுஞ்சினத்துக்காளாகி மரணத்தின் வாயிற்படிவரை கொண்டு வரப்பட்டான்.*

*இந்தக் கதையை வீடணன் இராவணனின் சபையில் எடுத்துச் சொல்லிக் சீதையை இராமனிடம் சேர்த்துவிட வேண்டும் என்று பெரும் மனஉறுதியோடு தன் தமையனுக்கு நல்லுரை கூறினான். தன் எண்ணங்களுக்குச் சார்பாகவே தன் அமைச்சரும் மற்ற அனைவரும் நல்லுரை வழங்குதல் இராவணனுக்குப் பழக்கமாகப் போய்விட்ட நிலையில் தன் தம்பி மாறாகப் பேசியதைக் கேட்ட இராவணன் அகந்தையின் கொடுமுடியில் நின்று அவனை ஏசி அச்சுறுத்தி, "எல்லை நீங்குதி! உடனே இந்நாட்டை விட்டுச் செல்!" என்று விரட்டினான்.*

*வீடணன் நான்கு மெய்த் தோழர்களுடன் இராவணனின் ராஜ்யத்தை விட்டு இராமனிடம் சரண் அடைந்த கதை யாவரும் அறிந்ததே. வீடணன் இராவணனின் அவையை விட்டுப் போகும்போது*

சொன்ன ஒருவாசகம் - வால்மீகியின் காப்பியத்தில் உள்ளபடி - நாம் என்றும் மனத்தில் அழியாது பதித்துக் கொள்ளத் தக்கதாகும். அது வடமொழியில் வருமாறு:

ஸுலபா$^{4}$: புருஷா ராஜன் சததம் ப்ரியவாதி$^{3}$ன: ।
அப்ரியஸ்ய து பத்$^{2}$யஸ்ய வக்தா ஶ்ரோதா ச து$^{3}$ர்லப$^{4}$: ॥

தலைவர் சிக்கலில் தடுமாறிக் கொண்டிருக்கும் போது அவர் செய்த தவற்றை எல்லாம் சுட்டிக்காட்டி அவற்றுக்கு மாற்றாகச் சில தியாகங்களைச் செய்யச் சொல்லி நல்லுரை தந்தால் இப்படிப் பேசுபவர்களைத் தலைவர் விரட்டியடித்து விடுவார்கள். அவருக்கு மட்டும் பிரியமாகப் பேசுபவர்கள் இவ்வுலகில் வெள்ளி, செல்வத்துடன் வாழமுடியும். கேட்க வருத்தம் அல்லது சினம் தருவதாக இருக்கும் நல்லுரையைத் தருவதற்கும் யாரும் முன்வர மாட்டார்கள். அதைக் கேட்கவும் யாரும் தயாராக இருக்கமாட்டார்கள். 'வக்தா ஶ்ரோதா ச து$^{3}$ர்லப$^{4}$:' என்பது சிறந்த பகுதி. இந்த நீதி சுலோகம் வால்மீக காலத்திலிருந்து இன்றுவரை பொருத்தமுடையதாகவே இருந்து வருகிறது.

இதனால் அகந்தையின் கொடுமை மிகத் தெளிவாகப் புலப்படுகிறது. அகந்தை உடையவருக்குத் தன் மனநிலை தவறானது, அதை உடனே விலக்கி விடவேண்டும் என்ற எண்ணம் தானாகத் தோன்றவே தோன்றாது. "உன் அகந்தையை நீ உடனே உன் மனத்திலிருந்து அகற்றி விடவேண்டும்" என்று அவனுக்கு நல்லுரை வழங்குவார் யாருமே இருக்கமாட்டார்கள். நண்பர் என்ற நிலையில் இருந்தவர் இப்படி நல்லுரை வழங்கியபின், தொடர்ந்து நண்பராக இருக்கமுடியாது.

ஆகவே அகந்தை என்ற மிகக் கொடிய நோய் பற்றிக்கொண்டு விட்டால் அதை நீக்குவது அரிதிலும் அரிது. இந்நோய் நம்மைப் பற்றிக் கொள்ளாமல் காத்துக் கொள்வதே அறிவுடைமையாகும்.



# செய்திகள்

## ஸ்ரீரமணாச்ரம செய்திகள்

### அன்னை அழகம்மை – நூற்றாண்டு மஹா பூஜை மற்றும் ஸ்ரீ ரமணாச்ரம நூற்றாண்டு விழா துவக்கம்

*பகவான் ரமண மகரிஷிகளின் அன்னையார் அழகம்மை சமாதி தினம் (மே 19, 1922 - வைகாசி கிருஷ்ண பக்ஷ நவமி) மஹா பூஜையாக ஒவ்வொரு ஆண்டும் ஸ்ரீ ரமணாச்ரமத்தில் அனுசரிக்கப்படுகின்றது. இவ்வாண்டு மே 24, 2022 அன்று மஹாபூஜை நூற்றாண்டு விழாவாக விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அதேநாளில், சென்னை ரமண கேந்திரம் மற்றும் பல ரமண மையங்களில் மஹாபூஜை அனுசரிக்கப்பட்டது.*

*1922-இல் அன்னையையின் உடலை மலையிலிருந்து கீழே கொணர்ந்து தற்போதுள்ள இடத்தில் அன்னையின் உடலை சமாதி வைத்தனர். பின்னர் ஒரு ஆலயத்தை*

*நிர்மாணிக்கப்பட்டு, மாத்ருபூதேச்வரர் ஆலயம் என்ற பெயரில் நித்ய பூஜைகள் மற்றும் வேதகோஷங்களுடன் ஒரு மகத்தான ஆலயமாக இலங்கிக் கொண்டிருக்கின்றது.*

*1923 ஆம் ஆண்டு ஜனவரி 3-ஆம் நாள் பகவான் ஜயந்தி தினம் கொண்டாடப்பட்டது. அதற்கு சுமார் ஒருவாரத்திற்கு முன்பே பகவான், தான் வசித்து வந்த மலைக் குகையில் இருந்து இறங்கி நிரந்தரமாக அன்னைக்கு சமாதி வைக்கப்பட்ட இடத்தில் (தற்போதைய ரமணாச்ரமத்தில்) தங்க ஆரம்பித்தார் என்று பதிவாகியுள்ளது. இதன்படி 28 டிசம்பர் 1922 ஆம் ஆண்டு ஸ்ரீ ரமணாஸ்ரம் உருவானது.*

*ரமண மகரிஷிகள் தாயார் அழகம்மை சமாதி வைபவம் நிகழ்ந்த நாளான 24 மே 2022 அன்று தொடங்கி 28 டிசம்பர் 2023 அன்று பகவானின் ஜயந்திவரை ரமணாஸ்ரம நூற்றாண்டு விழா வைபவங்கள் கொண்டாடப்படவுள்ளன.*

**ரமணாலயம், குரோம்பேட்டை**

*குரோம்பேட்டை ரமணாலயத்தில் மஹா பூஜை விழா காலை 8 மணி முதல் மாலைவரை திருவாசகம் முற்றோதலுடன் கொண்டாடப்பட்டது. திரளாக ரமண அன்பர்கள் முற்றோதலில் பங்குபெற்றது குறிப்பிடத்தக்கது.*

**முருகனார் மந்திரம், இராமநாதபுரம்**

*24-5-2022 அன்று மஹா பூஜை வைபவம் நடைபெற்றது. காலை 10 மணிக்கு அக்ஷரமணமாலை பாராயணத்துடன் துவங்கப்பட்ட இவ்விழாவில் தாயுமானவர் தபோவனம் சுவாமி ருத்ரானந்தா மற்றும் பிரம்மகுமாரிகள் அமைப்பின் தலைவி ராஜலக்ஷ்மி ஆகியோர் சிறப்பு உரையாற்றினார்கள். அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.*

**தேசிய கருத்தரங்கு, ரமண கேந்திரம், சென்னை**

*பகவான் ரமண மகரிஷிகளின் 72 ஆம் ஆண்டு ஆராதனை விழாவினையொட்டி சென்னை தத்துவலோக ஆடிட்டோரியத்தில் 8-5-2022 ஞாயிறன்று தேசிய கருத்தரங்கு மதியம் 2.30 மணி முதல் இரவு 7.30 வரை நடைபெற்றது. வேதபாராயணத்துடன் துவங்கிய இவ்விழாவில்*

*திருமதி. அம்பிகா காமேஷ்வர், ரமணோதயம் ஆசிரியர் டாக்டர் ராம் மோஹன், ஆன்மிக எழுத்தாளர் திரு. ஸ்ரீகிருஷ்ணா, சிறுமி ஸஹானா மற்றும் கலைமகள் ஆசிரியர் கீழாம்பூர் சங்கர சுப்ரமணியன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். இறுதியில் திருவாசகச் செந்நாவலர் மயிலை கபாலீச்வர ஆலய ஓதுவார் திரு. சற்குருநாத ஓதுவார் ரமண சந்நிதிமுறை பக்கவாத்தியங்களுடன் பண்ணிசையாக இசைத்தார். திரளான பக்தர்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர்.*



சிறப்புச் சொற்பொழிவாற்றிய கலைமகள் ஆசிரியர் கீழாம்பூர் சங்கரசுப்ரமணியன்



கருத்தரங்கில் மனங்கவரும் சிற்றுரை ஆற்றிய சிறுமி ஸஹானாவிற்கு தொகுப்பாளர் வஸந்தா பாராட்டுதல்கள்


---

Ramanodhayam - Tamil Quarterly, Registered with the Registrar of Newspaper for India. RNI NO.: TNTAM/2001/5542

Printed and Published by: A. Kumar Raja, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004 on behalf of Ramana Kendra Trust, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004

Editor: Dr. S. Ram Mohan

*Printed at:* **Multi Craft,**
9, Appavu Gramani 2nd St.,
Robertsonpet, Mandaveli, Chennai 600 028.



# ஸ்ரீ ரமணாச்ரம நூற்றாண்டு விழா கொண்டாட்டங்கள்

மஹா பூஜை நாளான 24 மே 2022
அன்று முதல் 28 டிசம்பர் 2023 அன்று
பகவானின் ஜயந்தி வரை
ஸ்ரீ ரமணாஸ்ரம நூற்றாண்டு விழா
வைபவங்கள்
அனுசரிக்கப்படுகின்றது.

Registered with the Registrar of Newspaper for India RNI No.:TNTAM/2001/5542



வள்ளி தெய்வானை சமதே ஸ்ரீ சுப்ரமண்யர்,
ஸ்ரீரமணாச்ரம மாத்ருபூதேஸ்வரர் ஆலயம்